T-UN-425

தமிழ் வாழ்க

# தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர்: ருசு　　மலர்: க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு

தமிழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

...ர் யாண்டு: உ௲கங, — துன்மதி: சித்திரை.

(1982 ஏப்ரல்—மே)

MALLIKA ARTS TJ

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன், பி. ஏ.,

# தமிழ்ப் பொழில்

துணர்: ௫௬] [மலர்: க

உள்ளுறை: 


| | பக்கம் |
|---|---|
| 1 வாழ்க! துந்துபி வருக! | .... 1 |
| பாவலரேறு புலவர் ச. பாலசுந்தரம், துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி | |
| 2 புதியதோர் உலகம் செய்வோம் | .... 2 |
| புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி. | |
| 3 தமிழவேள் த. வே. உ. நிகழ்த்திய தலைமைப் பேருரை | .... 5 |
| சென்னை மாகாணத் தமிழர் மாநாடு திருநெல்வேலி—1934. | |
| 4 தொல்காப்பியர் . . . . . . . . | .... 20 |
| பாவலரேறு புலவர் ச பாலசுந்தரம் துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி. | |
| 5 பாரதியின் நாடகப் படைப்புகள் | .... 36 |
| முனைவர் ஏ. என். பெருமாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-20. | |
| 6 சங்கத் தமிழ் வளர்த்த . . . . . . | .... 40 |
| சிறுவை மோகனசுந்தரம் சென்னை. | |
| 7 குடந்தையில் விழிப்புணர்ச்சி மாநாடு | .... 43 |
| முனைவர் சாலினி இளந்திரையன் பங்கு கொள்கிறார். | |
| 8 வேண்டுகோள் | .... 45 |
| த வே உ. நினைவுக் கழகம் | |
| 9 இதழ் உரிமை விளக்கம் | ... 48 |
| தமிழ்ப் பொழில் பற்றிய அறிக்கை | |


✻ ✻ ✻

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு**

| துணர் ௫௬ | திருவள்ளுவர் யாண்டு ௨௦௧௩<br>துந்துபி—சித்திரை<br>1982 ஏப்ரல்—மே | மலர் ௧ |
| --- | --- | --- |


தமிழ் வாழ்க

## வாழ்க! துந்துபி வருக!


பாவலரேறு
புலவர் ச. பாலசுந்தரம்


அறிவனும் ஞாயிறும் மதியொடு மேடத்(து)
அணிகொளக் கன்னியில் சனியொடு செவ்வாய்
நெறியுறத் துலையில் வியாழனும் மகரம்
நேர்ந்தநல் வெள்ளியும் வருத்தனை கொள்ள
இறைகமழ் மேட ராசியில் தநுவாம்
இலக்கினம் சிறப்பநாள் மூலத் துலகம்
துறைதொறும் செழிக்கத் தோன்றிசீர்ச் சித்திரைச்
சுரிகுழல் மடந்தையை வரைந்துவந் தொளிரும்

துந்துபி எனப்பெயர் துலங்குநல் லாண்டே
தூயநற் சித்திரைத் தோகையும் நீயும்
செந்தமிழ் நாடு சிறந்தொளி மேவச்
சிந்தையில் தூய்மை செழிப்புற வம்மின்!
முந்திய வறுமையும் பூசலும் முரணும்
முறுகிய ஊழலும் முடிவுபெற் றொழிய
வந்தெமை ஆள்கென வந்தனை கூறி
வாழ்த்துதும் வருக! வருக! நல்லாண்டே!

பொழிற்றொண்டர் உரை

# புதியதோர் உலகம் செய்வோம்

புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ.,

தமிழ்ப் பொழில் தொடங்கி ஐம்பத்தைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. இப்போது ஐம்பத்தாறாம் துணரின் முதன்மலர் வெளி யிடப் பெறுகின்றது. இரண்டாண்டுகளுக்கு முன்புவரை அரசு அலுவலர் ஒருவருக்கு ஐம்பத்தைந்து வயதாகுமானால் அவர் பணியிலிருந்து ஓய்வுபெற்று விடுவார். அதன்பின் அவர் நடைப் பாவையாகி விடுவார். அதுபோல் இத்தமிழ் நாட்டில் ஐம்பத் தைந்து ஆண்டுகள் உலவிவிட்ட தமிழ்ப்பொழில் இதழும் மெல்லத் தளர்ந்து, பெரும் பொருளிழப்பிற்கு ஆளாகி நின்று விடக்கூடிய ஒரு கொடிய சூழல் உருவாகிக் கொண்டிருந்தது. இக்கொடிய சூழலை நானேகூட நன்குணரத் தவறி விட்டேன். இந்நிலையில் ,,ஓராயிரம் ஆண்டு ஒய்ந்துகிடந்த பின் னர் வாராதுபோல் வந்த மாமணியாகத் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டு -1981- உருவாயிற்று.,, இத்தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர் 'பொறுப்பேற்றிருக்கும் பேராசிரியர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம், எம். ஏ., பிஎச். டி , அவர்கள் தாம் துணை வேந்தர் பொறுப்பேற்றுக் கொண்ட அன்றைக்கே முதல் வேலை யாக எங்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வருகை தந்தார்கள்; மாணவர்களோடு தாமும் ஒரு மாணவராய் வகுப்பறையில் அமர்ந்திருந்து ஆசிரியர்கள் பாடம் நடத்தும் முறையைக் கண்டறிந்தார்கள். பின்னர் என் அறையில் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்கள். அப்போதுதான் தமிழ்ப் பொழில் இதழ் பற்றிய விவரங்களைக் கேட்டார்கள். ''எவ்வளவு இதழ்கள் அச்சிடுவீர்கள்? என்று வினவிய பொழுது ''எழுநூற்றைம்பது இருக்கும்'' என்ற நான், தமிழ்ப் பொழில் கணக்குகளைப் பார்க்கும் பெரியவர் திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்களை உடனே அழைத்து ''எவ்வளவு இதழ்கள் வெளியாகின்றன'' என்று கேட்டேன். முந்நூற்றைம்பது படிகளே அச்சிடுகின்றோம் என்று விடை வந்தது. அதனைக் கேட்டதும் எனக்கே அதிர்ச்சி யாக இருந்தது. துணைவேந்தர் அவர்களின் முகமும் வாட்ட முற்றது. ''விரைவில் தமிழ்ப்பொழிலை வளர்க்க ஆவன செய்க'' என்றார்கள். ''ஆறு மாதத்தில் தமிழ்ப் பொழிலை வளர்ப்போம்;

இரண்டாயிரம் இதழ்கள் அச்சிட ஆவன செய்வோம்'' என்று நான் துணை வேந்தர்க்கு உறுதி கூறினேன்.

சில நல்ல வாய்ப்புகள் உருவாயின. மாவட்ட நூலக அலுவலர்கள் மனமுவந்து அருள் செய்தனர். தமிழன்பர்கள், தமிழாசிரியர்கள் முதலியோரை ஏராளமாக உறுப்பினர்களாகச் சேர்க்கமுடியும் என்று நம்புவதுடன் கல்லூரிகளிலும் மேனிலைப் பள்ளிகளிலும் ஆதரவு பெறமுடியும் என்ற உறுதியான நம்பிக்கையும் கொண்டுள்ளேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இந்த இதழ் முதல் ,,மூவாயிரம் இதழ்கள்,, அச்சிடுவதற்குரிய ஏற்பாடு களைச் செய்தோம்.

நாட்டிலே இருபதாயிரம் தமிழாசிரியர்கள் இருக்கின்றனர். தமிழாசிரியர் அனைவரும் தமிழ்ப் பொழில் உறுப்பினராகி விட்டால் தமிழ்ப் பொழில் வளம் பூத்துக் குலுங்கும். தமிழாசிரியப் பெருமக்கள் அருளுள்ளம் கொண்டு ஆவன செய்வார்களாக.

இதுவரை தமிழ்ப் பொழில் முப்பத்திரண்டு பக்கங்களைக் கொண்ட தாக இருந்தது. இந்த இதழ் முதல் ஐம்பத்திரண்டு பக்கங் களைக் கொண்டு மிளிரும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் மட்டுமன்றி வினாவிடைப் பகுதியும் இடம் பெறும். பயனும் சுவையும் உடைய இலக்கியப் பகுதிகளை மிகுதியாக வெளியிட எண்ணங் கொண்டுள்ளோம். மரபு குலையாமல் பாட்டெழுதி வந்த பேரா சிரியப் பெருமக்களைக் கூட புதுக் கவிதை மோகம் ஆட்கொள்ளத் தொடங்கி விட்டது. கவியரங்கங்களில் மரபுக்கவிதை பாடுவோர் அருகி வருகின்றனர். வெண்பா, கலிப்பா முதலிய பெயர்களே கூடத் தெரியாத பலர் இனிக் கவிஞர் என உலா வரக்கூடும்போல் தெரிகிறது. இந்நிலை நீங்கும் வகையில் — படைப்பிலக்கியம் பெருகும் முறையில் திங்கள் தோறும் கவிதைப் போட்டிகளை நடத்தவும் கருதியுள்ளோம், அடுத்த இதழில் வெண்பாப் போட்டி இடம் பெறும். முதற் பரிசு பெறும் கவிஞருக்கு ,,ஓராண்டு முழுவதும்,, தமிழ்ப் பொழில் விலை பெறாமல் இலவசமாக அனுப்பி வைக்கப்பெறும். தமிழ்ச் சான்றோர்களின் உணர்வூட்டும் கருத்துக் கருவூலங்கள் சிறு சிறு துணுக்குகளாக ஆங்காங்கே இடம்பெறும்.

இறுதியாகத் தண்டமிழ்ச் சான்றோர்களுக்கு ஒரு வேண்டுகோள். தமிழ்ப் பொழிலில் வெளிவரும் கட்டுரைகள் பற்றியும், தமிழ்ப் பொழிலை மேலும் சிறப்புடைய இதழாக்குவது குறித்தும் தங்கள் கருத்துக்களை அவ்வப்போது தெரிவித்து உதவுங்கள். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக நானும் பார்த்து வருகிறேன். ஒருவர்

கூடத் தமிழ்ப் பொழிலில் வெளிவரும் கட்டுரைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்ததில்லை. ''இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?'' என்னும் ஒருவகையான மந்த மான போக்குத் தமிழறிஞரிடையில் நிலவி வருவதாக நான் கருதுகிறேன். அந்த நிலை நீங்கட்டும். தமிழறிஞர்கள் தம் முடைய கருத்துக் கருவூலங்களைத் தமிழ்ப் பொழிலில் வெளியிட அனுப்பி வைப்பார்களாக. சுருங்கச் சொன்னால் ஓர் ஐந்து ஆண்டுக் காலம் தமிழ்ப் பொழிலைத் தொடர்ந்து படித்து வரு வோர் மிகச்சிறந்த தமிழறிஞர் ஆகக் கூடிய வகையில் தமிழ்ப் பொழிலை நடத்த வேண்டும் எனக் கருதிச் செயல்பட்டு வரு கின்றோம். தமிழர் அனைவரும் ஒல்லும் வகையான் உறுதுணை நிற்க வேண்டுகின்றோம்.

நன்றி, வணக்கம்.

---

## இந்திய மொழிகள் பற்றி.......

இந்தியாவில் முந்நூற்று அறுபத்தேழு மொழிகள் பேசப்படுகின்றன தேசிய கல்வி ஆராய்ச்சி, பயிற்சிக்குழு நடத்திய மூன்றாவது அனைத்திந்திய கல்வி மதிப்பீட்டுக் கருத்தரங்கில் இச்செய்தி தெரிய வந்துள்ளது. இம்மொழிகளுள் ஐம்பத்தெட்டு மொழிகள் தாம் பள்ளிகளில் பயிற்சி மொழியாக உள்ளன என்று மத்திய கல்வித்துணை அமைச்சர் திரு. பி. கே. துங்கன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

—தினமணி. 2—4—1982

* * *

இவற்றுள் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை பதினைந்து மொழிகளே.

இவற்றுள்ளும் ஆட்சி மொழியாக வற்புறுத்தப்படுவது இந்தி மொழி மட்டுமே!

உலக அரங்கில் பல நாடுகளில் பேசப்படும், முதன் மொழியான தமிழ் இந்திய அரசின் ஆட்சிமொழியாக இலங்குங் காலம் எக்காலம்? .. .. ..

* * *

**சென்னை மாகாணத் தமிழர் மாநாடு**
**திருநெல்வேலி -1934-**

# திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை

நிகழ்த்திய

## ★ தலைமைப் பேருரை* ★

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்''

சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டின் தலைமையை யான் பெற்றது, இம்மையில் மனிதன் பெறத்தகும் பேறுகள் யாவற்றினும் சிறந்தது என மதிக்கின்றேன். அறிஞர்களின் கூட்டத்திலிருந்து அவர்கள் நடுவிலும் அறிவுரைகளைக் கேட்பதினும் சிறந்த ஊதியமில்லை; உயர்தனிச் செம்மொழி யெனக் கற்றறிந்தோர் போற்றும் தமிழ் மொழியின் ஆக்கத்தைப் புரியும் தொண்டினும் சிறந்ததொரு தொண்டுமில்லை. எனது எளிமையைத் தெரிந்து வைத்தும், இச்சீரிய பணிக்கு என்னை ஆளாக்கியது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பால் தாங்கள் வைத்திருக்கும் நன்மதிப்பின் பொருட்டெனத் தெரிந்து, எனது நன்றியைத் தங்கட்கு உரிமையாக்குகின்றேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர் இந்திய நாட்டின் நிலையினையும், பிற நாடுகளின் நிலையினையும் ஒப்பு நோக்குவோர் பிற நாடுகள் இருளடர்ந்திருக்கவும், தமிழ் நாடு மட்டும் நாக

---

*அன்னைத் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் முன்னின்று பாடுபட்ட அறிஞர் பெருமக்களுள் ஒருவரான தமிழவேள் உமாமகேசுவரனார் கண்ட கனவுகள் படிப்படியாக நனவாகி வருவதையொட்டி, -தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் அமைந்ததுபோன்று- அன்னார் கண்ட இன்னபிற கனவுகளை நனவாக்க கரந்தைத் தமிழ்ச் சங்கம் எடுத்துவரும் ஆக்கப்பணிகளுக்கு முன்னோடியாக புதுக் கோலம்-எழிற்கோலம் பூண்டு இனித் தமிழ்ப் பொழில் வெளிவர விருப்பதை வெளிப்படுத்தும் இத்தலைத் திங்கள் ஏட்டில் தனித்தமிழின் சீர்மை பற்றித் -தமிழவேள் உமாமகேசுவரனார்- அவர்களின் கருத்தை விளக்க இத் தலைமைப் பேருரை மீண்டும் வெளியிடப் படுகிறது.

ரிகச் சுடர் பரப்பிச் செல்வமும் கொற்றமுங் கொண்டு, தலை நிமிர்ந்திருக்கவும் காண்பர்; சேர சோழ பாண்டியராய முடியுடை மூவேந்தரும் செந்தமிழ்ப் புரவலர்களைத் தமது துணைவராக வும் தோழராகவும் நட்பு கொண்டு கொடைமடம் பட்ட வள் ளன்மையால் அவர்களைப் பேணிப் புரந்து வந்தனர். மன்னர் முதல் ஊழியர் ஈறாகப் பல நிலையிலுள்ளவர்களும், ஆண் பாலரே யன்றிப் பெண் பாலரும் புலமையிற் சிறந்த கலைவாண ராய்த் திகழ்ந்தனர். கல்வி, பிழைப்பிற்கு வழியாய்க் கருதி இற்றை நாளில் பயிலப்படுவது போல் பண்டை நாளில் பயிலப் பட்டதில்லை. பல்கலைக் கழகத்தினர் வழங்கும் பட்டங்களைக் கலைவாணர் பெறுவதும், பெற்ற பின்னர் ஊழியங்களைத் தேடி அலைவதும், அலைந்து திரிந்து பதவிகளில் அமர்ந்த பின்னர், தாம் அரிதிற் கற்றுத் தேர்ந்த கலைகளின் பயிற்சியை நெகிழ விட்டு ஊதியம் ஒன்றினையே கருதுவதும்போல் அற்றை நாளில் கருதினாரில்லை. அவிச்சுவையினும் கவிச்சுவையே அயராத இன்பத்தை அளிக்கும் பெற்றியதெனத் தெரிந்து, நுண்மாண் நுழைபுலன் கொண்டு ஆய்ந்து கலையின்பத்தில் மாந்தர் திளைத் திருந்தனர். அறிவுடை யொருவனை அரசனும் விரும்பிப் போற்றியபடியால் தமிழ்நாடு கலைமலிந்த நாடாய்த் திகழ்ந்தது. இயல், இசை, நாடகம் எனுங் கலைகளே யன்றி ஓவியம் ஆதிய கவின் கலையும் சிற்பம் ஆதிய தொழிற்கலையும் ஆய கலைகள் அறுபத்து நான்கும் செழித்து வளர்ந்தன. கலையின் நுண் பொருள்களைக் கூறுதற்கான குறியீட்டுச் சொற்கள் தமிழில் இல்லையே எனப் பண்டைக் காலத்துத் தயங்கினாரில்லை. திரி சொற்களைப் பெய்து நூலெழுதுவதும், இரு நூற்றின் மேற்பட்ட எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் இருப்பதும், வேற்று மொழி களின் ஒலிக்குறிகளுக்கேற்ப தமிழில் சிலபல எழுத்துக்கள் இல்லா திருப்பதும் கலை வளர்ச்சியைத் தடை செய்யும் இடர்களெனத் தமிழர் பழி தூற்றிபதில்லை. பழந்தமிழ்க் காலமுதல் வடசொற் களும் திசைச் சொற்களும் தமிழில் இன்றியமையாத விடத்து வழங்கி வந்திருக்கின்றன ஆனால் பிற மொழிகள் தமிழுலகில் நுழைந்து பணி செய்ய நேருங்கால் அவைகள் தமிழியலுக்கு ஏற்ப உரு மாறித் தொழில் புரிய வேண்டுமென்பது ஆன்றோர் வகுத்த தமிழ் மரபு.

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.''

என்பது சூத்திரம் வடவெழுத்துக்களில் பல உரப்பியும், எடுத் தும், கனைத்தும் கூற வேண்டுதலின் அவை தமிழியலுக்கு முரண்படுதல் பற்றி அவ்வட வெழுத்துக்களை நீக்கி எழுதுவதே

முறையென மூதறிஞர் கண்டனர். வட சொற்கள் தமிழில் பெரிதும் வழங்கத் தலைப்பட்ட பிற்காலத்திலும் இவ்வியலுக்கு மாறுபடா வண்ணம் வடமொழி ஆக்கத்திற்குச் சில விதிகளும் நன்னூலார் வகுத்தனர். சங்க காலம் முதல் இதுகாறும் தோன்றி வரும் சிறந்த நூல்கள் யாவும் இம்மொழி மரபு வழுவாமல் பாதுகாத்து வருகின்றன.

இற்றை நாளில் தமிழை வளம் படுத்துவோ மெனத் தலைப்படும் ஒரு சிலர் தமிழ் எழுத்திலக்கணத்தில் குறைபாடுகள் மலிந்திருப்பதாகவும், அவற்றை அகற்றுதல் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாததெனவும் கூறுகின்றனர். நூல் வழக்கிலிருக்கும் மொழிகளையும் அவற்றின் எழுத்திலக்கணங்களையும் இக்கொள்கையினர் தடுநின்று ஆய்வரெனில், பிற மொழிகளிற் காணும் குறைபாடுகள் சொல்லிறந்தன வென்றும், தமிழ் மொழியில் அத்துணை குறைபாடுகள் இல்லை என்றும் காண்பர். Lord Cromer என்ற அங்கிலப் புலவர் தம் மொழியின் எழுத்திலக்கணத்திற் காணப் பெறும் குறைகள் சிலவற்றைத் தொகுத்து, அவை புலனாமாறு இக்கவியில் விளக்குகின்றனர்:

"In the English tonque we speak,
Why is break' not rhymed with 'freak'?
Well you tell me why it is true,
We say sew but likewise 'Jew'?
'Beard' sounds not the same as 'heard'
Cord' is different from 'word'
And since pay' is rhymed with 'say'
Why not 'paid' with 'said ' I pray?
'Cow' is cow, but 'low' is low
'Shoe' is never rhymed with 'foe'
And in short it seems to me
Sound and letter disagree"

இன்னோரன்ன குறைபாடுகள் எண்ணிறந்தனவாய் மலிந்திருந்தும் அங்கில மொழியின் வளர்ச்சி குன்றினதாவென உன்னிப் பாருங்கள். கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் ஒருங்கே உடைய அங்கிலப் புலவர்கள் தமது எழுத்திலக்கணத்தில் சீர் திருத்த முற்பட்டனரா? அங்கில எழுத்திலக்கணத்தில் சீர் திருத்தம் புரிய முற்பட்டவர் தாமும் எய்திய பயன் ஏதேனுமுளதா? Mason Olcott எனும் துரை மகனார் தமிழ் கற்பதில் ஆர்வந் ததும்புகின்றார்; தமிழ் இலக்கியங்களைக் கற்பதற்கான அளவு தம் தமிழறிவை வளர்க்க ஒல்லாதெனக் கண்டு, தம் நிலைக்குத் தமிழைக் கொணர்வதே சாலுமென விழைந்து,

இன்றியமையாதவை எனத் தாம் கண்ட சீர்திருத்தங்கள் சில வற்றைச் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்துவிட்டனர். இந்திய நாடு முற்றுமே பயிலக் கூடியவாறு நாகரி, உருது போன்றதொரு பொது வெழுத்தால் தமிழ் நூல்களை எழுத வேண்டுமெனவும் உலகெங்கணும் பயிலுதற் பொருட்டு உரோமன் எழுத்தாலாவது உலகப் பொதுவான ஒலிக்குறி எழுத்தாலாவது -International Phonetic Alphabet- எழுத வேண்டுமெனவும் கருதுகின்றனர். இலக்கிய நூல்களிற் காணும் செந்தமிழ் வழக்கை யொழித்துப் பேச்சு வழக்கிலுள்ள கொச்சை மொழியில் நூல்கள் எழுதப்பட வேண்டுமெனத் துணி கின்றனர். ஆகார, ஐகார, ஒகர, ஓகாரங்கள் ஏறிய மெய் யெழுத்துக்கள் அனைத்தையும் ஒருபடித்தாய் எழுதாது ணகர, னகர, றகர, லகர, ளகாரங்கட்கு மட்டும் மாறுபட்ட குறியீடு எற்றுக்கோ வெனவும், தந்நகர, றன்னகரங்கள் மிகைபட்டவை எனவும் கூறுகின்றனர். அச்சுக் கோப்போரின் துன்பத்திற் கிரங்கி, மற்றுஞ் சிலர் இருநூற்றின் மேற்பட்ட எழுத்துக்களில் சிலவற்றை அகற்றிவிட விரும்புகின்றனர்; வேறு சிலர் 'F' என்னும் அங்கில எழுத்தையும் அதுபோன்று தமிழில் இல்லாது பிற மொழிகளிற் காணும் புதிய எழுத்துக்களையும் தமிழ் நெடுங் கணக்கில் சேர்க்க வேண்டுமெனவும் கருதுகின்றனர். இக் கூறிய கொள்கைகள் நாகரிக உலகில் எம்மொழியாளரும் கைக் கொள்ளாதவை என்பது வெளிப்படை. பிறமொழிகளுக்குரிய சிறப்பெழுத்துக்களை நாடோறும் தமிழ் நெடுங்கணக்கில் சேர்த் துக் கொள்வதனால், என்றும் முற்றுப்பேறடையாதாய்த் தமிழ் நெடுங்கணக்கு, தன் பெயரினை யொப்ப நீள நீண்டு கொண்டே வரும். கன்னித் தமிழெனப் போற்றப் பெறும் உயர்தனிச் செம் மொழியின் எழில் நலமும் இயல்நலமுங் குன்றிக் கேடுற்றுத் தன் னு நவே மாறிவிடும். தமிழின் எழுத்தியல் இப்போதுள்ளவாறே, பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்தும் மொழிப்பயிற்சிக்கோ, மொழி வளர்ச்சிக்கோ இது தடை செய்வதெனக் கூறினா ரில்லையே. வீரமாமுனிவர், போப்பையர் ஆகிய அயல் நாட்ட வரும் எளிதில் தமிழ்ப்புலமை எய்தி, தமிழரும் புகழத் தகும் இலக்கிய இலக்கண நூல்களை இயற்றித் தமிழ் மொழியின் மாட்சிகளை வியந்து போற்றினரே யன்றி இக்கூறிய திருத்தங் கள் தேவையெனக் கருதினாரில்லை. ஆரியமும் தென்றமிழும் நன்குணர்ந்த நமது சமய குரவர்கள் திருமுறைகளை அருளிச் செய்யவும், நமது ஞான குரவர்கள் ஒப்புயர்வற்ற ஞானப் பனு வல்களை இயற்றவும் தமிழ் மொழி வளஞ்சுரக்க வில்லையா? வடகலையும் தென்கலையும் நிலை கண்டுணர்ந்த நச்சினார்க் கினியர், பரிமேலழகர் ஆகிய உரையாசிரியர்கள் வட நூலார்

கொள்கையில் அடிப்பட்டிருந்தும் தமிழ் மரபு இழுக்கா வண்ணம் உரை நூல்கள் இயற்றினாரன்றே! வட வெழுத்தைத் தமிழில் பெய்து எழுதும் கொள்கை இன்றியமையாதென இவ்வுரை யாசிரியர் காணவில்லையே? தமிழன்பர் என்றும், தமிழ்ப் புலவர் என்றும் தமிழை வளம்பெறச் செய்வார் போலவும் தமிழுக்குப் புத்துயிர் அளிப்பார் போலவும், வாய்ப்பறை சாற்றி அங்கிலம் வடமொழி ஆகிய பிற மொழிகளில் தமக்குள்ள பெருமதிப்பினால் தமிழ் மொழிமேல் குறைகளை ஏறிட்டுக் கூறியும், தமிழ் மொழி யின் சீரினை இழித்துக் கூறியும், மனம்போன வாறெல்லாம் சீர் திருத்தம் பேசத் தலைப்படுகின்றவர் போலித் தமிழரல்லவா? அங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் கூறிய கொள்கை களின்படி சீர்திருத்தங்களைப் புரிய நிரம்ப இடமிருந்தும் அவற் றைத் திருத்தத் துணியாது மொழியியல்தானும் தாம் உணர்ந் தறியாத தமிழ் மொழியைத் திருத்துவோ மென்பது பேதைமதி யன்றோ? இத்தமிழன்பர்களின் சீர்திருத்த முயற்சியால், தமி ழன்னையின் எழில் நலம் மறுப்படா வண்ணம் பாதுகாப்பது தமிழரின் முதன்மையான கடன் என எண்ணுகிறேன்.

கலை நூல்கள் தமிழில் எழுதப் பெறாதது பெருங் குறையென எல்லோராலும் கருதப் பெறுகிறது கலை நூல்களைத் தேடுவோ ரில்லாதபடியால் அவை வெளிவர வில்லை என்பார் ஒரு சாரார். நூலில்லாமையால் பயில்வோரில்லை என்பர் மற்றொரு சாரர். தமிழில் எழுதப் பெறும் கலை நூல்களுக்கு உண்மையான தேவை நாட்டில் இருந்தால், நூல்கள் ஒன்று பலவாகத் தோன்றிவிடு மென்பது எனது நம்பிக்கை. இது எவ்வாறாயினும் கலை நூல் களை எழுதுவதற்கு ஏற்ற முறை யாது என்பது பற்றிப் பெரிய தோர் ஆராய்ச்சி நிகழ்ந்து வருகின்றது. கலை நூல்களில் வழங் கும் குறியீட்டுச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் படைப்பது எவ்வாறு? ஆங்கிலமாதிய மேனாட்டு நூல்களில் வழங்கும் சொற்களையே எடுத்துக் கொள்ளுவதா, அல்லது தமிழ்ச் சொற் களால் ஆக்கிக் கொள்ளுவதா என்பது பற்றி அறிஞர்கள் கலாம் நிகழ்த்துகின்றனர். ஏற்ற தமிழ்ச் சொற்கள் நூலிலோ வழக் கிலோ கிடைக்கு மெனின் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்; இல்லாதவழி தமிழில் படைத்துக் கோடல் வேண்டும்; இதுவும் முடியாவிடில் பிறமொழி குறியீட்டுச் சொற்களைத் தமிழ் மரபிற் கேற்பத் திரித்து அமைத்துக் கோடல் வேண்டும். இதுவே பண்டையோர் கொண்ட முறை. பழைய இலக்கியங்களில் பயிலும் வடசொற்களும். திசைச் சொற்களும் பெரும்பான்மை யாகத் தற்சம. தற்பவ மொழிகளாய்த் தமிழ் எழுத்தால் எழுதப் படுதலும், தமிழ்ச் சொற்களையே இணைத்து வேற்று மொழிச்

சொல்லின் பொருளைத் தருமாறு படைத்துக் கொள்ளுதலும் வழக்கமாயிருந்து வந்திருக்கின்றன. பிறமொழியாளர்கள் கையாளும் முறைகளும் இவையே யாகும். 'சாம்புநதம்' என்பதை 'நாவலம் பெயரிய பொலம்' என வழங்கினர். 'நாவாய்' என்ற தமிழ் மொழியை 'Navy' என யவனர் திரித்துக் கொண்டனர். இதுபோலவே அங்கிலேயரும் 'அரிசி', 'இஞ்சி' என்பவற்றை 'Rice', 'Ginger' என ஆக்கிக் கொண்டனர். கலை நூல்களிற் காணும் நுண்பொருள்களையும். கருவிகளையும் உணர்த்துதற்கு நாள்தோறும் புதிது புதிதாகச் சொற்கள் படைக்கப்பட்டிருக் கின்றன. இச்சொற்களை நுனித்து ஆய்ந்தால் தாம் சுட்டும் பொருளை விளக்கும் சொற்கள் மிகச்சில; அச்சொற்களிற் பல, அவை உணர்த்தும் பொருளைக் கண்ட அறிஞர் பெயராலாதல் இடுகுறிப் பெயராலாதல் ஆக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இங்ஙனம் ஆக்கப்பெறும் சொற்களை ஒரு மொழியினின்றும் பிறிதோர் மொழியில் வழங்குங்கால் தத்தம் மொழிக்குரிய எழுத்துக் களில் திரித்துக் எழுதிக் கொள்ளுதலும் சொற்பொருள் விளங்கு மாறு தம் மொழியில் சொற்கள் படைத்துக் கொள்ளுதலும் மேனாட்டினர் கொள்ளும் முறைகளாம். சர்மனி நாட்டினர் கலைத்திறன் மிக்க நாடுகளில் முதலிடம் பெற்றுத் திகழ்பவர் என்பதை எவரும் மறுக்கத் துணியார். அறிவுநூற் பொருள் களைக் குறிப்பதற்கான சொற்களைப் பொருள் விளங்குமாறு சர்மனியர் தம் மொழியால் ஆக்கிக் கொள்ளுகின்றனர். அவர் கள் மொழிவளமேனும் கலைத்திறமேனும் குன்றினதில்லை, இச் சீரிய முறையை ஏன் தமிழர் கொள்ளக் கூடாது? கலை நூல் களிற் காணும் நுண்பொருள்களைக் குறிப்பதற்குத் தமிழில் சொல் லாற்றலும் சொல்வளனும் இல்லை என்பார், தமது அறியா மையை மொழியின் மேலேற்றி ஏதம் புரிவர் என விடுக்க. தருக்க நூல், அணி இலக்கணம், யோக நூல் ஞான நூல் முதலிய வற்றில் வடசொற்கள் பலவற்றைத் தமிழில் செவ்வனே மொழி பெயர்த்திருக்கக் காணலாம்; பல வடசொற்களைத் தமிழ்ச் சொற்களாகத் திருத்தி அமைத்திருக்கவுங் காணலாம் இற்றை நாளிலோ, அங்கிலத் துறையில் கற்றுத் தேர்ந்த பட்டதாரிகள் பள்ளிச் சிறார்கள் பயிலுதற் பொருட்டு, மேனாட்டுக் கலை களைப் பாடப் புத்தகங்களாகத் தமிழில் எழுதி வெளியிடுகின்ற னர். இந்நூலாசிரியர்களிற் பெரும்பாலர் தமிழ் நூற் பயிற்சி மிகமிகக் குறைந்தவர்; தமதுள்ளக் கருத்தைத் தெள்ளிதிற் கூற வாயில்லாது விழிப்பவர்; பொருள் விளக்கமற்ற, வாய் வழங் காத. சில வடசொற்களைக் கரடுமுருடாக முடைந்து குறியீட்டுச் சொற்களெனக் கருதித் தாம் எழுதும் கலை நூல்களில் அவற் றைப் பெய்து வெளியிடுகின்றனர். மாணவர்க்கும், ஆசிரியர்க்

கும் இந்நூல்கள் விளைத்து வரும் ஏதங்கள் மிகப் பல. தமிழறிவு நிரம்பாத ஆசிரியர்கள் எழுதும் கலை நூல்களாலும், பள்ளிப் படிப்பினாலும் கலை வளர்ச்சி பெருகுமென்றும், நாட்டு மொழி வளம்பெறுமென்றும் நினைப்பது பேதைமையாகும். இம்மட்டோ! தமிழ் மொழியை வளம்படுத்தும் கருத்துடன் கலை நூல்களிற் காணும் நுண்பொருள்களைக் கூற, தமிழறிவு இல்லாத கலை வாணரின் உதவி கொண்டு அரசியலார் வெளியிட்டிருக்கும் குறியீட்டுச் சொற்களின் அட்டவணைகள் பல்லாற்றானும் பிழை மலிந்திருத்தலால் தமிழ் நாட்டின் நன்மதிப்பை இழந்து வழக்கற்றிருக்கின்றன. வடமொழியாளரும். அரசியலாரும் படைத்திருக்கும் குறியீட்டுச் சொற்களின் அட்டவணைகள் உலகர் அனைவர்க்கும் பொருள் விளங்குமாறு அமைக்கப் பெற்றிருப்பதாகக் கருதலாகுமா? தமிழ்ச் சொற்களால் குறியீட்டு மொழிகளை ஆக்கிக் கொள்வதால் விளையுங் கேடுதான் என்னை? திருவாளர் மறைமலையடிகள், திருவாளர் கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் M A, M L, திருவாளர் A. சீனிவாசச்சாரியார் அவர்கள் B. A. L. T., திருவாளர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் முதலாயினோர் விழுமிய நடையில் எழுதி வரும் உரை நூல்களையும், அன்னார் புதுக்கருத்துக்களை எளிதாகத் தமிழில் எழுதுவதையும் கண்டு, தமிழ் மொழி வளங்குன்றியதெனப் பழி தூற்றும் வன்கண்ணர்களின் அறியாமைக்கு இரங்குகின்றேன்.

பள்ளியிற் பயில்வோர், அங்கில மொழிந்த ஏனைய பாடங்களைத் தமிழிற் கற்றுத் தேர்வது நாட்டிற்கும் நமக்கும் நலம் பயக்குமென்ற கொள்கை நாளடைவில் நிலைபெற்று வருகிறது, பள்ளியிறுதித் தேர்வி -S. S. L. C.-லுங் கூட கலை நூற்பொருள் பற்றிய வினாக்களுக்குத் தமிழில் விடை பகரலாமெனும் உரிமை வழங்கப் பெற்றுமிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே, கலை நூற்பயிற்சி தமிழில் நடப்பதே தமது முடிந்த நோக்கமென்று நடுத்தரந் தேர்வு -Intermediate- க்கான தருக்க நூலொன்றும், பிற நூல்களும் தமிழில் இயற்றத் தொடங்கி இருக்கின்றனர் என்றாலும், கல்லூரித் தலைவர்கட்கும் பல்கலைத் தலைவர்கட்கும், கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் இக்கொள்கையில் முழு நம்பிக்கையில்லை; உறுதியில்லை; ஊக்கமுமில்லை; தமிழில் கற்பிக்கும் ஆற்றலுமில்லை. இன்னபல காரணங்களால் தாய்மொழியில் கல்வியைக் கற்பித்தல் என்பது பேச்சளவில் இருக்கிறது. இன்னும் ஆட்சி

யில் வரவில்லை தங்குற்றங் காணமாட்டாத ஆசிரியர், புதுவதான கலைப்பொருளைத் தமிழில் மொழிவதற்குச் சொல்வளமில்லையெனவும், கலைநூல் எழுதுவாரில்லையெனவும், பொய்க்கரி கூறி வீணே காலங் கழிக்கின்றனர். இப்பொருள் பற்றி, உசுமானியப் பல்கலைக்கழகப் பேரவையில் நவாபு மாடியார் சங்கு பகதூர் அவர்கள் M. A., 8--2--1934உயில் நிகழ்த்திய பேருரையைத் தமிழ்நாட்டுத் தலைவர்கள் பல்காலும் படித்துத் தெளிவுறுவாராக. அப் பொன்னுரையின் சுருக்கம் வருமாறு;-

"எங்கள் மொழித்திறனில் முழு நம்பிக்கை வைத்தோம். புதுக் கலைகளின் கருத்தை உணர்த்த அயல்நாட்டு மொழியே இன்றியமையாத கருவி என்றும் தாய்மொழி இதற்கு ஏலாத கருவி என்றும் கொண்டிருந்த பழங் கொள்கையால் இந்தியர்கள் பழிக்கு ஆளானது மன்றிக் கீழ்நிலையும் எய்தினர் எனக் கண்டோம். வேற்று மொழியைக் கற்றுப் புலமை பெறவும், அதன் வாயிலாய்க் கலையறிவு பெறவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளால் இக்கொள்கைக்கு அடிமை ஆகிறோம் என்பதை நன்கு உணர்ந்தோம். வேற்று மொழியாலன்றிக் கலையறிவும், உயர்நிலையும் எய்தவெண்ணாது நுண்மதி மழுங்கி ஆயுந் திறனழிந்து, பாடப் புத்தகங்களை உருவேற்றி ஒப்புவிக்கும் கருவிகளாயினோம் எனத் தெளிந்தோம். தாய்மொழி தாழ்ந்த தரத்தது. கலைக் கருத்துக்களைத் தன்னகப்படுத்தவோ பிறர் உணருமாறு கூறவோ முடியாதது என்ற எண்ணங்கள் மனிதனின் ஆய்புலத்தையும், தன்முயற்சியையும் மழுங்கச் செய்யும் மனநிலையை விளைத்து விட்டன. தாய்மொழி இழிதகவுடையதெனும் கொள்கையை மறுக்கத் துணிந்தவர் சென்ற ஒரு நூற்றாண்டாக வெளிவரவில்லை. இந்திய மக்கள் கல்வியில் தேர்ச்சி யடைதற்கு ஆங்கிலமே ஏற்ற கருவியென மக்காலே துரைமகனார் அறிக்கை விடுத்த காலந்தொட்டு அனைவர்க்கும் தாய் மொழியில் நம்பிக்கை ஒழிந்து விட்டது. எமது தாய் மொழியில் கல்வி வழங்குவம் எனப் பல்கலைக்கழகம் கூறிய ஞான்று பல்வகைத்தான எதிர்ப்புக்கள் இங்குத் தோன்றின. சிசுக் கொலை புரிவோர் சிலர் கழகத்தின் கருத்தை உடனே முறிந்துவிட எண்ணினர்; சிலர் சொல்வளம் நிரம்பாத இந்துத்தானி மொழி புதுக் கருத்துக்களைக் கூற முடியாது தடுமாற்ற முறுமெனவும், அம்மொழியைக் கருவியாகக் கொண்டு கற்பிக்க முயலும் கலைக் கழகமும் உருப்படாது மாய்ந்

தொழியு மெனவும் கூறினர்; மற்றுஞ் சிலர் ஆங்கில நாட்டிலுள்ள கலைக் கழகங்களின் நன்மதிப்பைப் பெற மாட்டாதென நினைத்தனர்; யானோ இக்கலைக் கழகத்தாரின் புதுக் கொள்கையில் முழு நம்பிக்கை வைத்தவன்; கழகந் தொடங்கியவர்களின் மதி நுட்பத்தை மிகவும் மெச்சினேன்; துணிபுடன் செயல்புரிந்ததை மகிழ்ச்சியுடன் பாராட்டினேன். தாய்மொழிப் பயிற்சியில் தமக்குள்ள குறைவினை உன்னி, சொல்லாற்றல் இல்லையே எனக் கணக்காயர் முதலில் மயங்கினர். இதுபோது கழகந் தொடங்கிப் பத்து ஆண்டுகள் ஆயின. இந்துத்தானி மொழி புதுத்தேவைகளுக்கேற்றவாறு விளங்குவதையும், கலைநூற் பொருள்களை எளிதே கூறுவதற்கு ஏற்ற கருவியாய் இருப்பதையும், உள்ளக் கருத்துக்களை முட்டின்றி மொழிவதற்குத் தம் சொல்வளம் பல்கியதையும் அக்கணக்காயரே கண்டு இன்புறுகின்றனர். இலக்கியங்களும், கணித மாதிய கலைகளும் இயல்பிலே வந்து தாய்மொழியில் இசைவுடன் அமைந்துவிட்டன. சுருங்கக் கூறின், கழகந் தோன்றிய காலத்தே பலர் உள்ளத்தும் விளைந்த ஐயப்பாடுகள் யாவும் அகன்றொழிந்தன. புதுக்கலைகள் எல்லாம் மிக எளிதில் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. இக்கழகத்தே தேர்ச்சி பெறுபவர் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் உள்ள கலைக் கழகங்களின் தேர்வுகட்கு எவ்வாற்றானும் தாழ்வில்லையென மதிக்கப் பெறுகின்றனர். நீதிக்கலை, மருத்துவக்கலை, சிற்பக்கலை, உழவுக்கலை ஆதிய தொழிற்கலைக் கல்லூரிகளும் சீரிய முறையில் வளர்க்கப் பெறுகின்றன.

செயற்கரிய கருமமெனத் தமிழர் கருதும் செயல்களை உசுமானிக் கலைக் கழகத்தினர் பத்தாண்டுகளில் மிக எளிதில் இயற்றியதன் பொருட்டென்னை? உண்மையான மொழிப்பற்றும் தன்னம்பிக்கையும், எண்ணிய கருமத்தை எவ்வாற்றானும் இயற்றுவேமெனும் மனத்திண்மையுமல்லவா? தமிழன்பர் என மகுடமிட்டுக் கொள்பவரிடத்து இத்தகைய பெற்றிமைகள் காணப்படுகின்றனவா? இவர்மாட்டுத் தன்னம்பிக்கையில்லை; தாய்மொழியின் எழில் நலங்களையும் சொற்சுவை, பொருட்சுவைகளையும் காண்பதற்குரிய தமிழறிவில்லை; ஆதலால், புதுக் கருத்துக்களைப் பேசுதற்குச் சொல்லில்லையெனவும், எழுதுதற்கு எழுத்தில்லையெனவும் பழி தூற்றி அயல் மொழிகட்கு அடிமைகளாயிருக்கின்றனர். சென்னை மாகாணத்தில் கல்வித்

துறையிலும், அரசியல் நெறியிலும் உயர் பதவியிலிருப்பவர்கள் அங்கில மொழியில் மதிப்பும் வடமொழியில் பற்றும் உடையவர்களாய் அவற்றை வளர்ப்பதில் கருத்துடையவர்களாய் இருக்கின்றனர். சில காலமாய் நிகழ்ந்து வரும் நாட்டுமொழிக் கிளர்ச்சியின் பலனாய் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் F.A., B. A. தேர்வுகட்குத் தமிழைக் கட்டாயப் பாடமாக வைத்தும், தமிழாராய்ச்சிக் கழகம் நிறுவியும், தமிழகராதி வெளியிட்டும், தமிழில் B. A., Honours ஏற்படுத்தத் தீர்மானித்தும் சிறந்த தமிழ்ப்பணி ஆற்றியதாகக் கருதுகின்றனர். சற்றே ஆராய்ந்து பார்த்தால் இவை யெல்லாம் வெளிமயக்கு என்பது தேற்றமாகும். B. A., தமிழ்த் தேர்விற்கு வசதி தரும் உயர்தரக் கல்லூரி சென்னை நகரத்தில் ஒன்றுதானுமில்லை; வெளி நகரங்களில் கும்பகோணம் தவிர்த்த பிற விடங்களில் இல்லை. தமிழ் வித்துவான் தேர்விற்கு வசதி தரும் கல்லூரி திருவையாறு அல்லாத பிறவிடங்களில் இல்லை. அங்கில மொழியையும் வடமொழியையும் வளர்க்காத கல்லூரியும் பல்கலைக் கழகமும் சென்னை மாகாணத்தில் இல்லவே இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தினர் முடிவு செய்தவண்ணம் தமிழ் Honours வகுப்புகள் என்றைக்கேனும் உருவாகுமோவென ஐயுற வேண்டியிருக்கின்றது. சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் வெளியிட்டிருக்கும் நூல்களையும், அவர்கள் செலவிட்ட தொகைகளையும் ஒப்பு நோக்குமிடத்து, கழகத்தின் வேலை நன்மதிப்பிற்குரியதாயில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் தொடங்கிய தமிழ்வேலை சென்னைக் கழகத்து வேலையினும் சிறிதளவு சிறந்ததெனக் கூறலாம். தமிழ் மொழிக்குத் தனித்தலைமை கொடுத்துச் சீரிய முறையில் வளர்க்கும் கடப்பாடுடைய இக்கழகத்தும் ஏனைய கழகங்களை யொப்பவே தமிழுக்கு ஓர் ஒதுக்கிடமே கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கழகங்களில் செய்யும் வேலைகளை யெல்லாம் செய்யத் தலைப்பட்டுப் பணமில்லாமை கண்டு தமிழைச் சிறந்த முறையில் பேண வழியில்லையென மயங்குகின்றனர். தமிழில் கலைநூல்கள் எழுதுதற்குப் போதிய அளவு தொகைகள் தருவதில்லை. தமிழ் ஆராய்ச்சி வேலைக்கும் தமிழ் Honours தேர்வுக்கும், தமிழ் வித்துவான் படிப்பிற்கும் வருகின்ற மாணவர்களை ஊக்குதற் பொருட்டுப் போதிய அளவு உதவிச் சம்பளங்கள் கொடுப்பதில்லை. தமிழ் நாட்டில் அருகிக் காணப்பெறும் நல்லாசிரியர்களைத் தேடி கொணர்ந்து பேணியும் போற்றியும் வைத்துக் கொள்ளுவதில்லை; வடமொழிப் பிரிவில் பல்வகைத்தாய சிரோமணி வகுப்புகளை நிறுவத் துணிந்தவர்கள், தமிழில் வித்துவான் வகுப்பு மட்டும் வைத்து சிரோமணிப்

பிரிவுகளை யொத்த தமிழ்ப்பிரிவுகள் ஏற்படுத்தா திருக்கின்றனர். இசைக் கல்லூரியில் தமிழ்க் கல்விக்கு இடந்தராமலும், தமிழிசையை வளர்ப்பதற்குரிய வழிகளை அமைக்காமலும், தமிழ்ப் பற்றுடைய மாணவர்களைச் சேர்க்காமலும் வன்கண்மை புரிகின்றனர். இப்பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் கழகத்தில் தமிழ் மொழிக்கும் இப்பல்கலைக் கழகத்திற்கும் சிறந்த தொடர்பு இருப்பதாகச் சட்டத்தில் புலனாகவில்லையே என வாதுபுரிபவர்களைச் சேர்த்திருப்பதால் அவர்களால் விளையும் தடுமாற்றங்கட்கு அளவுதானுமில்லை. பல்கலைக் கழகங்களில் உயர் பதவியிலிருப்பவர்களில் பெரும்பாலர் தமிழ்ப்பற்றும் தமிழறிவும் இல்லாதவர்கள். ஆதலால் இக்கழகங்களில் அமைப்பு மாறினாலன்றித் தமிழ்மொழி கீழ்நிலையில் வைக்கப்படுமென்பது ஒருதலை. ஆட்சிக் கழகத்திலும் -Syndicate-, கலைக்குழுவிலும் -Academic Council- இடம் பெறுபவர் தமிழ்ப் பற்றில்லாத மேனாட்டுக் கலையறிஞர். இவர்களால் தமிழ் வளர்க்கப் பெறுமென எண்ணுவது ஏமாற்றத்திற்கிடமாகும்.

வங்காளியர், மராட்டியர், ஆந்திரர் ஆகிய இந்தியர்கள் மிகுந்த மொழிப்பற்றுடையவர்களாய்க் காணப் பெறுகின்றனர். அங்கிலத்திலும், மேனாட்டுக் கலைகளிலும் புலமை நிரம்பியவர்களும் தம் தாய் மொழியில் பற்றுடையராய்த் திகழ்கின்றனர். செல்வம் படைத்தவர் மொழி வளர்ச்சிக்கான கருமங்களிற் செலவிடுதற் பொருட்டுப் பெருந்தொகைகளைத் தருகின்றனர். தாம் கற்ற கலை நூற் பொருள்களைத் தம்மவர் எளிதில் கற்பதற்குரிய நூல்களைத் தம் தாய்மொழியில் இயற்றுகின்றனர். தமிழ் நாட்டினர் தாய்மொழி வளர்ச்சிக்காக யாது செய்கின்றனர்? தமிழ்ப் பற்றுடையவர்கள் ஒரு சிலர் ஆங்காங்கு நடாத்தி வருகிற தமிழ்க் கலாசாலைகளையன்றி, சிறந்த முறையில் விரிவான ஏற்பாடுகளுடன் நடத்தப் பெறும் உயர்தரத் தமிழ்க் கல்லூரி ஒன்றேனும் தமிழ் நாட்டின் எல்லைக்குள் காண்பதற் கில்லை. தமிழ் வளர்ச்சிக்குச் செய்யப்பெறும் சிறு முயற்சிகள் நாடெங்கும் சிதறிக் கிடக்கின்றமையாலும், இவை சிறந்த குறிக்கோள் ஒன்றினை எய்தும் கருத்துடன் நடத்தப் பெறாமையாலும் மதிக்கத்

தக்கதான பலன் இவற்றால் விளைவதில்லை. தமிழ் நாட்டிலுள்ள குறுநில மன்னர், நிழக்கிழவர்கள், செல்வர்கள் ஆதிய பெருமக்களில் பெரும்பாலர் தமிழ் மொழியிடத்து அன்பில்லா திருக்கின்றனர்; செவியிற்சுவை யுணரமாட்டாது வாயுணர்வில் திளைப்பவராயிருக்கின்றனர். இவர்களுடைய அரண் வாய்ந்த மாளிகைகளில் கண் முதலிய புலன் களைக் கவரும் பொருள்கள் சேமித்திருப்பதன்றி, அறிவையும் மனதையும் கவரும் தமிழ் நூல்களைக் காண்பது அரிதினும் அரிதாகின்றது. நாட்டின் தலைவர்களது நிலை இதுவானால், பொது மக்க ளின் நிலைமையைப் பேசவும் வேண்டுமோ? சினிமா, நாடகமாதிய காட்சிகளும், கிராமபோன் பாடல் களும், காபி ஆதிய உண்டாட்டுக்களும், சமய வாதங்களும், சாதிக் கலகங்களும், அரசியற் போர் களும், இன்ன பலவும் அளவிறந்த இன்னல்களை விளைப்பனவாயிருந்தும், அவைகளே மக்களின் உள்ளத்தை ஈர்த்து அயராது ஊக்கி வருகின்றன. நல்ல நூல்களைக் கற்பதும், கற்றவர்கள் வாயி லாய்க் கேட்பதும் வழக்காரற்று வருகின்றன. தமிழ் நாட்டின் நகரங்களிலுள்ள புத்தகக் கடைகளில் அங் கிலப் பள்ளிக் கூடங்களிற் பயிலும் பாடப் புத்தகங் களையன்றி நல்ல தமிழ் நூல்களை விற்பது அரிதாகி விட்டது. செய்தித் தாள்களையும், நொடிப்பும் நகையும் மலிந்த விகடத் தாள்களையும், காதல் களவு முதலிய சிறுமைகளை விளங்கக் கூறி அறியா மக்களை இன்புறுத்தும் நாவல்களையுமே தமிழ் மக்கள் பேணுகின்றனர். ஞானசாகரம், ஞாயிறு, செந்தமிழ்ச் செல்வி, கலா நிலையம், தமிழ்ப் பொழில் போன்ற மாதத் தாள்களை ஆதரிப்பார் மிக மிகக் குறைந்து வருகின்றனர் சுருங்கக் கூறின், தமிழரிற் பெரும்பாலர் சிறு தொழில்களையும், சின் னீரவாகிய இன்பத்தினையும் நாடுபவர்களாய், வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள்களை அறியாத

வர்களாய்க் கீழ்நிலையை எய்தி இருக்கின்றனர். உலகர் போற்றிப் புகழும் உச்ச நிலையில் இருந்த தமிழ் மக்கள் ஆற்றல் குன்றி, அறிவிழந்து கல்லா மாக்களாய் ஆனதன் பொருட்டு என்னை? தாய் மொழிப் பயிற்சியை நெகிழவிட்டோம்; தமிழ் மூதறிஞர் கூறிய உறுதிப் பொருள்களை மறந்தோம்; அன்னியர் நடை, உடை பாவனைகட்கும் அன்னிய மொழிகட்கும் அடிமைப்பட்டோம். இதனா லன்றோ கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்வி முற்ற — வல்லாருமில்லையவை வல்லார் அல்லாரு மில்லை'' எனக் கூற முடியாது, நம்மவரில் 100க்கு 95 பேர்கள் கல்லா மாந்தர் எனக் கணக்கிட லாயிற்று.

இக்குறைகளைத் தீர்ப்பதற்குரிய வழி துறைகளை அமைப்பது கடன் எனக் கண்ட தமிழறிஞர், எவ்வகையான முன்னேற்றத் திற்கும் கல்வியே சிறந்த கருவி எனத் தெரிந்து ஆங்காங்கே மாநாடுகள் கூட்டத்தொடங்கி இருக்கின்றனர். சில ஆண்டுகளின் முன்னர்த் துறையூரிலும் சின்னாளின் முன்னர்ச் சென்னையிலும் கூட்டங்கள் நிகழ்ந்தன. ஆரவாரங்கள் மிக்கிருந்தனவே யன்றி, விளைந்த பயன் யாதொன்றுமில்லை. அக்கூட்டங்கள் வீணே கூடிக் களைந்ததன் காரணம் யாதென ஆராய்ந்து அத்தகைய இடர்ப்பாடுகள் இங்கு விளையாது நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சமயத் திருத்தம், சாதித் திருத்தம் பற்றிய முடிபு களைக் கருதத் தொடங்கினால் கலாம் விளையுமே யன்றி, நலம் காண முடியாது. அரசியலாரும், பிறரும் செய்ய வேண்டிய கருமங்கள் இவையிவையென முடிவுகள் செய்வது அவலமாய் முடிகின்றன. மொழி வளர்ச்சிக்கு அடிப்படையான கருமங்கள் எவையென அறுதியிட்டு, அவற்றுள் சிலவற்றையேனும் நாமே நிறைவேற்ற வேண்டுமெனும் மனவுறுதியுடன் முடிபுகள் செய்ய வேண்டும். தீர்மானிக்கப்படும் முடிபுகளை ஆட்சியில் கொணர்ந்து காரியங்களை முட்டின்றி முடிப்பதற்குரியதோர் சங்கத்தை நிறுவ வேண்டும். உண்மைத் தமிழ்ப் பற்றும், பிறருடன் தோழமை கொண்டுழைக்கும் ஒருமைப்பாடும் உடைய தமிழன்பர்களையே அச்சங்கத்தில் உறுப்பினராய்ச் சேர்க்க வேண்டும். அறிவுக்கலை, அழகுக்கலை. தொழிற்கலை ஆதிய கலைகள் அனைத்தையும் செவ்விய தமிழில் தக்கார் துணைகொண்டு இயற்ற வேண்டும்; இவ்வாறு இயற்றப்படும் நூல்களைப் பயில்வதற்குத் தொடக்கக்

கல்லூரிகளையும், நடுத்தரக் கல்லூரிகளையும், உயர்தரக் கல்லூரிகளையும் நாடெங்கும் நிறுவ வேண்டும்; நல்ல நூல் நிலையங்களை நாட்டவும், பொதுமக்கள் அவற்றைப் பயன்படுத்தவும் மிக மிக வசதிகள் இயற்ற வேண்டும். இச்சங்கத்தின் கொள்கைகளை ஆங்காங்குப் பரவச் செய்வது தமது தலையாய கடமை எனக் கருதித் தமிழ்ப்பண்டிதர் அனைவரும் இத்தமிழ்ப் பணியை மேற்கொள்ள வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ச் சங்கங்கள் யாவும் ஒரு நோக்குடன் செயல்புரியும் பொருட்டு அவற்றை இச்சங்கத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும். தமிழ்ச் சங்கங்கள், ஆண்டு விழாக்கள் நடத்துவதோடமையாது, இயல்பிற்கேற்றபடி தமிழ்க் கலாசாலையும், நூல் நிலையமும் நடத்தவும், சார்ந்துள்ள மக்கள் காவிய நலன்களை நுகரவும், கலை அறிவில் வேட்கையுறவும் வசதிகள் அமைக்கவும் தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களை அவ்வப்போது வாங்கவும் முன்வர வேண்டும். அரசியலாரின் துணையையோ, அங்கிலக் கல்லூரிகளின் ஆதரவையோ எதிர்பாராது, ,,தமது வாழ்க்கையை நன்மதிப்புடன் நடத்திக் கொள்ளுமாறு மருத்துவம், சோதிடம், இசை, நாடகம் போன்ற சில தொழிற் கலைகளையும் வித்துவான் படிப்பிற்குப் பாடமாக அமைத்துச் சிறந்த முறையில் உயர்தரக் கல்லூரி நாட்ட வேண்டும். இவ்வாறன்றி, தமிழ் இலக்கிய-இலக்கணங்களை மட்டும் பயின்றால் எவ்வண்ணம் B. A., முதலிய பட்டதாரிகள் பிழைக்கும் வழி தெரியாது, வேலையில்லாது விழிக்கின்றார்களோ அவ்வண்ணமே தமிழில் புலமை பெறுவோரும் தவிக்க நேரும்.,, இசைத்தமிழ், நாடகத் தமிழ், மருத்துவக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை ஆதிய கவின்கலைகளில் தமிழ்ப்புலவர்கள் திறனடைந்தால் இக்கலைகள் யாவும் வளர்ந்தோங்கும்; தமிழ்ப்புலவர் வளம்பெறுவர். நாடும் நலனுறும். இது தமிழ்ப் பித்தனுடைய வெறுங்கனவன்று. உண்மையில் தமிழ்ப் பற்று உடைய அறிஞர்கள் ஒருங்கு சேர்ந்து, ஆங்காங்குள்ள அன்பர்களின் துணைகொண்டு சிறிது சிறிதாகப் பொருள் ஈட்டித் தமிழ்த் தொண்டு புரியத் தலைப்பட்டால் இவை மிக எளிதில் நிறைவேறும். தன்னம்பிக்கையும், உலையாத ஊக்கமும் தளராத முயற்சியும் கருந்துவேறுபாடு விளையக்கூடிய கருமங்களினின்றும் விலகுதலும், ஒருமைப்பாடு கொண்டு உழைப்பவர் இத்தமிழ்த் தொண்டே மேற்கொள்ள வேண்டும். தமிழ் நாட்டின் எல்லைக்குள் அங்கிலக் கல்லூரிகள் எத்தனை வடமொழிக் கல்லூரிகள் எத்தனை வளனுற விளங்குகின்றன! பிறமொழிகள் வளர்தற்கும், தமிழ் மொழி வளங்குன்றுதற்கும் காரணமாவது தமிழரின் முயற்றின்மையேயாகும். அரசியலாரையும், நாட்டின் தலைவர்களை

யும், மடங்களின் தலைவர்களையும், பெருஞ் செல்வரையும் பழி தூற்றுவதில் பயனில்லை.

உழப்பின் வாரா உறுதிகளுளவோ
கழப்பின் வரராக் கையற வுளவோ

என்ற பொய்யா மொழியினைக் கடைப்பிடித்துத் தமிழறிஞர் ஊக்கத்துடன் முயல வேண்டும்.

தமிழ் நாட்டின் நிலை பல்லாற்றானும் தளர்வுற்றிருக்கின்றது. நூற்றுக் கணக்கான அங்கிலக் கல்லூரிகளும், இரண்டு பல்கலைக் கழகங்களும் தமிழ் நாட்டின் எல்லைக்குள்ளிருந்தும், தமிழரிற் பெரும்பாலர் கல்லா மாக்களெனக் கருதப்படுகின்றனர். அங்கிலக் கல்லூரிகளிலிருந்து கற்றுத் தேறி வெளி வருபவர் புதுக்கொள்கைகட்கு அடிப்பட்டுப் பிறர்மாட்டு அன்பும் அருளும் கொண்டு தொண்டு புரியுமாறறியாத ஊமராய்த் தனிச் சாதியினராயிருக்கின்றனர். ,,அறியாமை அகலவும், நாடு நலஞ் சிறக்கவும் தமிழ்க் கல்வியே சிறந்த கருவி.,, தமிழ் மொழியின் ஆக்கம் பெருகுதற்குரிய வழிகளை நாடித் தமிழறிஞர் நாட்டைப் புரப்பாரக

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப்பெறின்.

நலம்.

---

## இளந்தமிழா, .... ....

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திரு நீ!
இளந்தமிழா, கண்விழிப்பாய்!

—பாவேந்தர் பாரதிதாசன்

தொல்காப்பியர் கூறும்

## தமிழ் எழுத்துக்களின்

# குறியீட்டு விளக்கம்

பாவலரேறு

புலவர் ச. பாலசுந்தரம்

முன்னுரை:

0:0 தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்றெனத் தொல்லோர் வகுத்த வரையறையை மேற்கொண்டு தொல்காப்பியர் அவற்றின் பெயர், ஒலி, அளவு, ஒலித்திரிபு, உரு, இயக்கம் முதலாயவற்றை தம் நூலுள் வெளிப்படையாகவும் நுட்பமாகவும் கூறியுள்ளார்.

0:1 ஒருசார் எழுத்துக்கள் மொழியாகவும் யாவும் மொழிக்கு உறுப்பாகவும் நிகழ்தலானும், அம்மொழிகள் தொடருங்கால் வேற்றுமை வழி — வேற்றுமை யல்வழி என்னும் நெறியில் தொடர்தலானும் அம்முறையால் எழுத்திலக்கணத்தை விளக்க வேண்டி எழுத்ததிகாரத்தை ஒன்பது இயலாகப் பகுத்து உணர்த்தியுள்ளார்.

0:2 அவற்றான் எழுத்துக்களின் ஒலி நிலைமையும், உருவ அமைப்பையும் தெளிவாக உணர்த்துதற்பொருட்டு அவை முந்துவளியால் உந்தி முதலாகத் தோன்றி எண்முறை நிலையான் உறுப்புற்றமைந்து உருவாகிச் செவிப்புலனாகப் பிறக்கும் இயல்பினை ஓரியலால் உணர்த்தி, அதற்குப் பிறகு பிறப்பியல் எனப் பெயரிட்டுள்ளார்.

0:3 மொழியாகிய காரியம் நிகழ அவ் எழுத்துக்கள் கருவியாய் நின்று செய்கை பெறுதலின், ஏனைய எட்டு இயல்களையும் கருவியியல்—செய்கை யியல்களாகப் பகுத்துக் கொண்டுள்ளார்.

0:3.1 அவற்றுள் நூன்மரபும், மொழிமரபும், புணரியலும் கருவியியல்களாகவும், தொகைமரபும், உருபியலும், உயிர்மயங்கியலும், புள்ளி மயங்கியலும், குற்றியலுகரப் புணரியலும் செய்கை இயல்களாகவும் அமைந்துள்ளன. பிறப்பியல் நூன்மரபிற்கும் மொழி மரபிற்கும் கருவியாகும், இவற்றுள்ளே சில சூத்திரங்கள் கருவி பற்றியும் சில செய்கை பற்றியும் வரும்.

பொருளுரை:

**1:0** **அ**கரம் முதல் னகர மீறாக உள்ள முப்பஃதும் குற்றியலிகரம் முதல் ஆய்தம் ஈறாக உள்ள மூன்றும் மொழிக்கு உறுப்பாக முதற் கருவியாய்த் திகழ்தலின் இவற்றிற்கு எழுத்து என்னும் பெயரைப் பொதுக் குறியீடாக அமைத்துள்ளார்.

**1:1** **எ**ழுத்தென்பது இன (சாதி) ஒருமைச் சொல். பால்பகா அஃறிணைப் பெயர் என்றும் கூறுவர்.

'எழுத்து'

சொற்பொருள் விளக்கம்:

**2:0** **எ**ழுத்து என்பதற்கு எழுப்புவது என்பது பொருள். அஃதா வது எழுப்புதலைச் செய்வது என்பது கருத்து. இச்சொல் எழு என்னும் முதனிலையோடு 'செய்வது' என்னும் பொருள் தரும் 'து'வ் விகுதி சேர்ந்து எழுவது எனத் தன்வினையாய்ப் பின் தகர ஒற்று இரட்டித்து எழுப்புவது என்னும் பொருளில் 'எழுத்து' என ஆக்கம் பெற்றதாகும்.

'து'வ் விகுதி செயப்படு பொருள் தருவதை ஒத்து -ஓதச் செய்வது- கூத்து-குதிக்கச் செய்வது-, சாத்து = (வாணிகம்) -கூவிச் சார்த்து தலைச் செய்வது- முதலிய சொற்களால் தெரியலாம்.

**2:1** **க**ண்டத்தினின்று எழும் ஒலிக்கூறுகளை நா முதலிய உறுப்புக்களால் எழுத்தொலியாக 'எழுப்பு' என்னும் பொருள் படும் எழூஉ என்னும் முதனிலைஏவல் வினைச்சொல் அல் என் னும் வியங்கோள் விகுதியோடு கூடி 'எழூஉதல்' என்றாகி எழுப்புக! என்னும் பொருள் தருதலை

நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்
—[நூன் மரபு. 6]

என்னும் ஆசிரியர் கூற்றால் தெளியலாம்.

எழூஉ + த் + அல் = எழூஉதல்.

இதனுள் தகரம் எழுத்துப் பேறு.

எழு. தன்வினை. எழூஉ, எழுப்பு, என்பவை பிறவினை.

**2:2** **செ**விப்புலனாக இசைக்கும் எழுத்தொலிகள் -சொல்லாகிக்- கிளத்துவோர்க்கும், கேட்போர்க்கும் இடையே நிகழ்தலின், அவை நிகழ்காலத்திற்கு மட்டுமே பயன் தந்து இறந்த காலத்தை

உணரவும், எதிர்காலத்திற்கு உணர்த்தவும் பயன்படாமையின், அவ் ஒலி உருவைக் கட்புலனாகும் வரிவடிவாக்கிப் பயன்கோடல் வேண்டி முனைவன் கண்ட முதனூலில் வரிவடிவங்களைப் பதிவு செய்தானாக; அவ்வரிவடிவைக் காணுந்தொறும் அவை அவற்றிற்குரிய ஓசையை ஒலிவடிவாக நம் அகச்செவிக்குப் புலப்படுத்தலின், அவ்வோசையை 'எழுப்புதலைச் செய்வது' என்னும் பொருளில் எழுத்து எனக் குறியீடு செய்துள்ளனர். இதனான் அஃதொரு காரணக் குறியீடென்பது புலனாம்.

2:3 ஒரு சாத்தனின் உடம்பு அச்சாத்தனைச் சுட்டி உணர்த்துவதுபோலக் கட்புலனாம் எழுத்தும் செவிப்புலனாம் எழுத்தும் ஒற்றுமையும் (அபேதம்) வேற்றுமையும் (பேதம்) இருதன்மையும் (பேதாபேதம்) உடையவாம். ஆதலின் எழுத்தென்பது ஒலி உருவையும் வரிவடிவையும் ஒருங்குணர்த்தும் குறியீடு என்பது புலப்படும்.

*தனி எழுத்தும் சார்பெழுத்தும்:*

3:0 தமிழ் எழுத்து முப்பத்து மூன்றனுள், அகர முதல் னகர மீறாய முப்பதும் தனித்து வரும் மரபின வாதலின், அச்சிறப்புத் தோன்ற 'எழுத்து' என்றும் குற்றியலிகரம் முதலாய மூன்றும் அவை பற்றுக்கோடாக ஒரு மொழியைச் சார்ந்து வரும் மரபினவாதலின் ''எழுத்தோ ரன்ன'' என்றும் ஆசிரியர் விளக்கினார். முதல் நூற்பாவில் குற்றியலிகரம் முதலிய மூன்றும் சார்ந்து வரல் மரபின என்றதனால் அகர முதலிய முப்பஃதும் தனித்துவரல் மரபின எனப் பொருட்பேற்றால் கொள்ள வைத்தார் ஆசிரியர். பின்னைய மூன்றும் சார்பெனவே முன்னைய முப்பஃதும் தலைமையானவை எனக் கொள்ளலாம்.

3:1 இடைக்கால இலக்கண நூலார் அகர முதலிய முப்பதினை முதலெழுத்து எனக் குறியீடு செய்தனர்; மூலாட்சாரம் என்னும் வடமொழிக் கோட்பாட்டினை எண்ணி. அதனாற் சார்பெழுத்தென்பதற்குத் தவறான பொருள் கொள்ள நேர்ந்தது, தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் -தலைமை எழுத்துக்களின் விகாரங்களை- சார்பு எழுத்தாகக் கொண்டனர். தொல்காப்பியர் இவற்றை முதலெழுத்து எனக் கூறாமையை நோக்குதல் வேண்டும்.

3:2.1 தனித்து வரும் மரபினையுடைய முப்பது எழுத்துக்களையும், தொன்னூலார், பிறப்பு, முறை, ஒலி, அளவு முதலாய

இயல்புகளை நோக்கி ''உயிர்'' என்றும், ''மெய்''யென்றும், உயிரின் வகையாகக் ''குறில்'' என்றும், ''நெடில்'' என்றும், அளவு காரணமாக ''அளபெடை'' என்றும் ''குறுக்கம்'' என்றும், மெய்யின் தன்மைகளை நோக்கிப் ''புள்ளி''-''ஒற்று'' ''உயிர்மெய்'' என்றும் மெய்யின் வகையாக ''வலி''--மெலி'' ''இடை'' என்றும் எல்லாவற்றிற்கும் பொதுவாகச் ''சினை'' என்றும் குறியீடு செய்துள்ளனர்.

3:2.2 அவற்றுள் அகர முதல் ஔகார மீறாக உள்ள பன்னிரண்டும் 'உயிர்' என்னும் பொதுக் குறியீட்டினையும் அவற்றுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெடில் என்னும் சிறப்புக் குறியீடுகளையும் பெற்றுள்ளன.

3:2.3 ககர முதல் னகர மீறாக உள்ள பதினெட்டும் 'மெய்' என்னும் பொதுக் குறியீட்டினையும், பிறிதொரு நிலையில் அவை 'புள்ளி' என்னும் சிறப்புக் குறியீட்டினையும் மற்றுமொரு நிலையில் 'உயிர்மெய்'என்னும் சிறப்புக்குறியீட்டினையும், ஒரோவழி மெய்யும், புள்ளியும், 'ஒற்றெ'ன்னும் குறியீட்டையும் பெற்றுள்ளன.

3:2.4 மெய் பதினெட்டனுள் கசடதபற என்னும் ஆறும் வல்லினம் -வன்கணம்- என்றும், ஙஞணநமன என்னும் ஆறும் மெல்லினம் -மென்கணம்- என்றும், யரலவழள என்னும் ஆறும் இடையினம் -இடைக்கணம்- என்றும் வகைக் குறியீடுகளைப் பெற்றுள்ளன.

'உயிர்'

தன்மையும் சொற்பொருள் விளக்கமும்:

4:0 தாமே உயிர்த்து இசைத்தலும், அலகு பெறுதலும் 'மெய்' எழுத்து இசைப்பதற்குத் துணையாகி அலகுபெறச் செய்தலும் உயிர் எழுத்தின் தன்மைகளாகும்.

[அலகு பெறுதல் அசையின்கண் எண்ணப் பெறுதல்]

4:1 'உயிர்' என்னும் குறியீட்டுச் சொல் உய்--இரு என்னும் இரண்டு மூலங்களாலான ஒரு பெயர்ச் சொல்லாகும். அதனான் 'உய்' என்பதன் யகரம் இரட்டாமலும் 'இரு' என்பதன்கண் உள்ள ஈற்று உகரம் கெட்டும் ஒன்றாய் இணைந்துள்ளது.

'உய்' என்பது ஓர் இசைக் குறிப்புச் சொல். வழக்கில் இஃது 'ஒய்' என வழங்கும். ஓரிடத்தினின்றும் விரைந்து வெளிப்படுதல் என்பதிதன் பொருள். இர் (இரு) என்பது தங்குதல் அமர்தல் என்னும் பொருள் தரும் குறிப்புரிச்சொல்.

இவை இரண்டும் இணைந்து ஈண்டு உந்தி முதலா முந்து வளியால் கண்டத்தினின்றும் உய்ந்து வாய் உறுப்புக்களில் அமர்ந்து செவிப்புலனாக வெளிப்படும் எழுத்து(ஒலி)களைச் சுட்டி ஒரு சொல்லாய் அமைந்தன. அதனான் உயிர் என்பது காரணக் குறியீடாதல் தெரியலாம்.

4:2 இதனை உவம ஆகுபெயர் எனல் திரிபுணர்ச்சியால் தோன்றிய இடைக்கால வழக்காகும். உயிரெழுத்தை 'ஆவி' என வழங்கலும் அவ்வழக்கே யாகும். தொல்காப்பியர் உயிர் எழுத்துக்களை ஆவி என்னும் பெயரால் எவ்விடத்தும் வழங்கினாரில்லை.

குறில்—நெடில்

என்பவற்றின் விளக்கம்:

4:3.1 உயிர் எழுத்து ஒரு மாத்திரை யளவினதாய்த் தோன்றி இசைப்பது குறில். இரண்டு மாத்திரை யளவாய்த் தோன்றி இசைப்பது நெடில்.

4:3.2 குறில் நெடில் என்பவை ஒன்றினொன்று விகாரப் பட்டவை யல்ல. இரண்டும் வெவ்வேறு எழுத்துக்கள். இப் பெயர்கள் மாத்திரை யளவான் ஒன்றை நோக்கி ஒன்றற்கமைந்த பெயராகும்.

4:4.0 தமிழ் நூலார் ஓர் உயிரெழுத்து [இருவகை வழக்கின் கண்ணும்] மூன்று மாத்திரை யளவும் அதற்கு மேலும் நீண்டிசைப்பினும் அவற்றைத் தனியெழுத்தாக அமைத்துக் கொள்ளவில்லை. உயிர் எழுத்தின் விகாரமாகவே கொண்டனர். அதனால் சொற்பொருளை மாறுபடுத்தவும், செய்யுளின்கண் ஓசை நிரப்பவும் ஓரெழுத்தின் மாத்திரையை நீட்ட வேண்டின் வேண்டுமளவிற்குக் குற்றெழுத்தின் ஓசையைக் கூட்டி. நீட்டிக் கொள்ளலாமென விதித்தனர்.[1] நெட்டெழுத்துக்கள் மாத்திரை சுருங்கின் அவ்வவற்றின் இனமாகிய குற்றெழுத்தாக மாறி நிற்கும்.

---

1 நூன்மரபு-சூ. 6, மொழிமரபு-சூ, 8.

**4:4.1** அம்முறையில் இனமில்லாத ஐகாரமும் ஔகாரமும் நீளின் முறையே அவை ஈகார ஊகாரங்களின் இனமாகிய இகர உகரங்களின் ஓசையைப் பெற்று இசைக்கும் எனவும், சுருங்கின் இகர உகரங்களாக மாறுதற்கு இயலாமையின் சுருங்கிய அளவில் 'குறுக்கம்' எனப் பெயர் பெற்று நிற்கும் எனவும் புறனடை விதித்தனர்.[2]

**4:4.2** இந்நிலையில் ஐகாரம் மட்டுமே இருவகை வழக்கிலும் குறுகி வருகின்றது. ஐகாரக் குறுக்கத்தை ஒரு மாத்திரை யளவினதாகக் கொண்டு 'அய்' என்னும் போலி எழுத்துக்களால் இசைத்தல் நெறியாகும் என்பார்.[3]

ஔகாரம் ஒரு மொழியின் முதற்கண் அன்றி இடையிலும் ஈற்றிலும் வாராமையின் ஔகாரக் குறுக்கம் நேர்தல் இல்லை.

இடைக்காலச் செய்யுள் வழக்கில் மொழி முதற்கண் மோனைத் தொடையில் ஔகாரம் அவ் என்னும் போலி எழுத்துக்களால் எழுதப் பெற்றுள்ளது. இதனை வழுவமைதியாக ஏற்கலாம் என்பது அவர்தம் கருத்து.

**4:4.3** எனவே உயிர் எழுத்துக்கள், பிறந்து வெளிப்பட்டு இசைக்கும் தன்மையால் 'உயிர்' என்றும், மாத்திரை யளவு காரணமாகக் குறில்—நெடில்—அளபெடை—குறுக்கம் என்றும் குறியீடுகள் பெற்றுள்ளமை தெளிவாகும்.

இனி 'மெய்' — 'புள்ளி' — 'ஒற்று' — 'உயிர்மெய்' என்னும் மெய்யெழுத்துக் குறியீடுகளை முறையே காண்போம்.

## 'மெய்'

### தன்மையும் சொற்பொருளும்:

**5:0** ககர முதல் னகர மீறாக உள்ள பதினெட்டு எழுத்துக்களும் 'மெய்' என்னும் பொதுக்குறியீட்டினைப் பெற்றுள்ளன. இவை தனித்தியங்கி ஒலிக்கும் இயல்பில்லாதவை. ஓர் உயிர் எழுத்தின் பின்னோ உயிர்மெய் எழுத்தின் பின்னோ ஒரு மொழிக்கு உறுப்பாக நிற்குங்கால் அரைமாத்திரை யளவினதாக ஒலிக்கும். அவ்வழி அது 'புள்ளி' என்னும் குறியீட்டினைப் பெறும். புள்ளி பெறுவது மெய்யெழுத்தே ஆதலின்,

---

2. மொழி மரபு-9, 24, 3. மொழி மரபு-23

"மெய்யின் அளபே அரையென மொழிப"
—[நூன்-11]

என வழிநூல் வாய்ப்பாடு கொடுத்து ஆசிரியர் கூறுகின்றார்.

5:1.0 மெய்யெழுத்துக்கள் மொழி மூவிடத்தும் உறுப்பாக வரும். உயிர்மெய்யாகியவழி தனித்து வரும். இடையிலும் ஈற்றிலும் வருங்கால் தம் உருவு திரியாமல் அரை மாத்திரை ஒலித்து நிற்கும். முதற்கண் வருங்கால் ஓர் உயிரின் துணைக் கொண்டு உருவு திரிந்தும் திரியாமலும் உயிர் மெய்யெனப் பெயர் பெற்று நிற்கும்.

5:1.1 மெய் எழுத்து இசைத்தலைக் கருதி உயிரைத் துணையாகக் கொள்ளும்பொழுது தனது இயல்பாகிய அரை மாத்திரை அளவை இழந்து, துணைக்கொண்ட உயிரின் அளவையே தனக்கு அளவாகப் பெற்று நிற்கும்.

5:1.2 இந்நிலை வேறுபாடுகளால் இப்பதினெட்டு மெய்களும் ஒலிப்பில்லா நிலையில் 'மெய்' என்றும் ஒலிப்புடைய நிலையில் 'புள்ளி' என்றும் இரண்டற்கும் பொதுவாக 'ஒற்று' என்றும் உயிர்த் துணையோடு இசைக்குங்கால் 'உயிர்மெய்' என்றும் குறியீடுகளைப் பெறுகின்றன.

6:0 'மெய்' என்பது பொருண்மை (உண்மைத் தன்மை), நிலைபேறு, வடிவம், உருவம், காட்சி, உடம்பு—யாக்கை, மேனி என்பவை முதலாகப் பல பொருள் தரும் ஒரு சொல். ஈண்டு அது வடிவம்-உருவம், காட்சி என்னும் பொருள்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்கிறது.

'மெய்' என்னும் சொல்லமைப்பு:

6:1 'மெய்' யென்னும் இச்சொல் இடப்பொருளுணர்த்தும் மகர மெய்யை அடிப்படையாகக் கொண்டு அதன் மேல்; அடைதல், சேர்தல், பொருந்துதல் என்னும் பொருள்படும் எய் (எய்துதல்) என்னும் வினைக்குறிப்பு உரிச்சொல் இயைய (ம்+எய்=மெய்) எனப் பிறந்து ஆக்கம் பெற்று ஒரு குறியீட்டுச் சொல்லாகி நிற்கிறது.

6:1.0 'ம்' என்னும் குறிப்பொலி தனித்தியலாதாகலின் அகரத்தைச் சார்ந்து 'அம்' என்றும் உகரத்தைச் சார்ந்து 'உம்' என்றும் நிற்கும். அம்—உம் என்பவற்றை இடைச்சொல்லாகக்

கொள்வர் இலக்கண நூலார். கொள்ளினும் இடமுணர்த்தும் குறிப்பு மகர மெய்யையே சாரும்.

இதனை, நிலம். குளம், மன்றம், குன்றம், பக்கம் என வரும் சொற்களில் இறுதியிலும், மண், மணை, மடை, மருங்கு(வீதி), மறுகு, மதில் என வரும் சொற்களில் முதலிலும் காணலாம்.

6:2 [ம்+எய்] = மெய் உயிர் எய்துதற்கு இடமாக இருப்பது என்பது கருத்து. கதிரவன் காய்தற்கு இடமாக இருக்கும் விசும்பைக் காயம் (ஆகாயம்) என வழங்குதல் போல்வதோர் இலக்கணை வழக்கு இது. இம்முறை பற்றியே

''மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே''
—[நூன்-18]

என்றார் ஆசிரியர்.

6:3 ககர முதலிய பதினெட்டும், நா முதலிய வாயுறுப்புக்களால் உருவாகி, ஒலிப்பின்றி, உயிர் மேவுதற்கு அணுக்கமாக நிற்கும் நிலையில் 'மெய்' என்னும் குறியீட்டைப் பெறுகின்றன. இவை தம் உருவைச் செவிப்புலனாகப் புலப்படுத்த வேண்டின் சாரியை இடைச் சொல்லாகிய அகரத்தைத் துணையாகக் கொள்ளும். இதனை

''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்''
[—மொழி-13]

என்று கூறுவார் ஆசிரியர். இங்ஙனம் மெய்யெழுத்துக்கள் ஒலிப் பின்றி உருவாகி நிற்றலை;

''இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்''
—[பிறப்-15]

''பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்''
—[பிறப்-16]

என்றாற்போலப் பிறப்பியலுள் கூறப்படுவனவற்றால் அறியலாம். அஃதாவது இதழும் இதழும் இணைந்து நிற்கு மிடத்து, பகரத்தையும் — மேல்வாய் பல்லினைக் கீழிதழ் பொருந்தி நிற்குமிடத்து வகரத்தையும்; காட்சியளவையாற் காணலாம். ஏனையவும் இவ்வாறு உருப்பெறுதலைக் காண லாம்.

6:4 எனவே, இச்சொல் உயிர் வந்து எய்துதற்கு இடமாதலும், வாயுறுப்புக்களால் தம் உருவைப் புலப்படுத்தி நிற்றலும்ஆகிய

இயல்புகள் தோன்றநிற்றலின் மெய் என்பதும் காரணக் குறியீ டாகும். மெய்யை உவம ஆகுபெயரென்றலும், உடம்பு எனக் கூறுதலும் திரிபுணர்ச்சியால் நேர்ந்த இடைக்கால வழக்காகும்.

அடுத்துப் புள்ளி யென்பதைக் காண்போம்.

## புள்ளி

பெயர் நுட்ப விளக்கம்:

**7:0** தனித்தியங்கும் இயல்பில்லாத மேற்கூறிய மெய், ஒரு மொழியின் இடையிலும் ஈற்றிலும் ஒலிப்புடையதாய் ஒற்றி வருங்கால் தன் 'உரு' வெளிப்படச் செவிப்புலனாகி அரை மாத்திரை ஒலிக்கும் அந்நிலையில் மெய் என்னும் பெயர் மாறிப் புள்ளி என்னும் குறியீட்டைப் பெறுகிறது.

**7:1** புள்ளி [புள் + இ = புள்ளி] ஒலிப்பினை யுடையது என்பது இதன் பொருள். 'புள்' என்னும் பல பொருளொரு சொல் ஈண்டு 'ஒலி' என்னும் பொருளில் இகர விகுதி பெற்றுப் புள்ளி என இலக்கணக் குறியீடாகின்றது. 'புள்' என்பது பொள் எனத் திரிந்து வழக்கில் வரும். [பொள்ளென ஆங்கே புறம் வேரார்' —குறள்-487]

**7:2** உயிரெழுத்தின் ஓசையை இசையெனப் பெயரிட்டுணர்த்திய ஆசிரியர் மெய்யின் ஓசையைப் புள்ளி என்னும் பெயரால் உணர்த்துகின்றார். தொல்காப்பியர் இந்நியதி பிறழாமல் தம் நூல் முழுதும் கூறிச் செல்வதை,

> 'ஆய்தம்' என்ற முப்பாற் புள்ளி
> —[நூன்-2]

> டறலள என்னும் புள்ளி முன்னர்
> —[நூன்-23

> ஞணநமன யரழவளள என்னும்
> அப்பதி னொன்றே புள்ளி யிறுதி
> —[மொழி-45]

> ணன வெண் புள்ளி முன்
> —[தொகை-4]

> புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
> —[தொகை-14]

னரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி யிறுதி விளிகொள் பெயரே
[விளிமரபு-11]

ஞகாரை முதலா ளகார ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபெனப் படுமே
—[செய்-232]

என்றாற்போல மூன்று அதிகாரங்களிலும் வரும் நூற்பாக்களால் தெளியலாம்

இம்மரபானே, மெய்யீறுகள் மயங்கும் புணரியலுக்கு மெய்ம் மயங்கியல் எனப் பெயர் கூறாமல் புள்ளி மயங்கியல் எனப் பெயரிட்டுள்ளமை தெரியலாம்.

மேலும் மொழி புணரியல்பைக் கூறவந்த ஆசிரியர்

''எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர் என்று ஆயீரியல''
—[புணரியல்-1]

என வரைந்து, மெய் ஈறாக நிற்குங்கால் ஒலிப்புடையதாக நிற்கும் என உணர்த்துவாராய்

''மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்''
—[புணரியல்-2]

என விளம்பினார். மற்றும் இப்புள்ளி எழுத்து ஈறாக நிற்குங்கால் வருமொழியில் உயிர் வந்து புணரின் தனது ஒலிக்கும் இயல்பை இழந்து மெய்யாக மாறும் என்பார்

''புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே''
—[புணரியல்-36]

எனத் தெளிவுறுத்தினார். புள்ளியியல்பு மாறிய நிலையில் அஃது ஒலிப்பில்லாத மெய்யாக நிற்றலின் 'மெய்யொடுஞ் சிவணும்' என்றார்.

உயிர் ஏறுவதற்காகக் கெட்ட புள்ளி இயல்பு உயிர் பிரியுங்கால் மீண்டும் எய்தும் என்பார்.

மெய்உயிர் நீங்கின் தன்உரு வாகும்
—[புண-37]

எனப் புலப்படுத்தினார் என்க.

அடுத்து 'ஒற்று' என்பதைப் பார்ப்போம்.

‘ஒற்று’

பெயர் நுட்ப விளக்கம்:

**8:0** ஒற்று என்னும் இச்சொல் ஒலித்தலை உடையது; அடுப்பது என்னும் பொருள் தரும். முதற்பொருளுக்கு ‘ஒல்’ என்பது பகுதி அது ‘து’வ்விகுதி சேர ஒல் + து = ஒற்று என்றாகும். [ஒல் = ஒலி]

இரண்டாவது பொருளுக்கு ஒன்று -ஒன்றுதல்- என்னும் சொல் மூலமாகும். இம்மென்றொடர்க் குற்றுகரம் பிறவினைப் பொருள் தர வேண்டி, வன்றொடர்க் குற்றுகரமாகி, அடுத்து நிற்பது என்னும் பொருளைத் தரும்.

“ஒற்றொற்றித் தந்த பொருளை மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்”
—[குறள்-588]

இதனுள் ஒற்றிக் கொளல் என்பது இப்பொருட்டாதல் காண்க.

**8:1** ஈண்டு ஒற்றென்பது ஒலித்தலை உடையது என்னும் பொருளில் புள்ளியையும், அடுத்து நிற்பது என்னும் பொருளில் மெய்யையும் உணர்த்துதலின் ஆசிரியர் அதனை இரு பொருளிலும் கையாளுகின்றார். இவற்றுள்,

அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
—[புணரியல்-31]

நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றா கும்மே
—[உரு-7]

னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல்
—[கிளவி-5]

குறிலே நெடிலே குறிலிணை குறிநெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
—[செய்-7]

என வருமிடங்களில் ‘புள்ளி’ என்னும் பொருளிலும்

திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
—[குற்றிய–27]

ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
ஒற்றிய தகரம் றகரமாகும்
—[குற்றிய-39]

என வருமிடங்களில் மெய்யென்னும் பொருளிலும் ஆசிரியர் ஆளு வதைக் காணலாம்.

8:1.0 இவ் ஒற்றுத் தன் அரை மாத்திரையின் நீண்டு ஒரு மாத் திரை பெறின் அளபெடை எனப் பெயர் பெற்று இசைத்து அலகு பெறும் [செய்யுளியல்: சூ-17]

அலகு பெறுதல் = செய்யுட் சீரின்கண், எண்ணப் பெறுதல்.

இனி உயிர்மெய்யைப் பற்றிக் காண்போம்.

## உயிர் மெய்

சொற்பொருள் விளக்கம்:

9:0 உயிர் மெய் என்பது வினைத்தொகை. உயிர்க்கும் இயல் புற்ற மெய்யென்பது இதன்பொருள். பின்வந்த இலக்கண நூலாரும் உரையாசிரியன்மாரும் தொல்காப்பிய மரபை நுனித் துணராமல் உயிர்மெய்யை உம்மைத் தொகையாகவும் உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகவும் கொண்டு பொருள் கூறினர் அதனான் உயிர்மெய்யை இரண்டு எழுத்தாகக் கருதினர். இத்திரிபுணர்ச்சியால் இதனை ஒரு சார் பெழுத்தாகவும் கூறினர். இன்றளவும் இப்போலியான கருத்து நிலை பெற்றுள்ளது:

உயிர்மெய் எழுத்து எ, ஒ, ஐ, ஔ என்பவற்றைப்போல ஈரொலி கள் இயைந்த ஓரெழுத்தென்பதனை எண்ணிலர். இவ்வாறே நூன்மரபில் உள்ள பல சூத்திரங்களுக்குப் பிறழவுரை கண்டுள்ள னர்.

9:1 ஒலிப்பில்லாத மெய்யெழுத்து ஒலிப்புடையதாக ஆகுங்கால் அது புள்ளி என்னும் குறியீட்டைப் பெறுதல்போல, மெய் யெழுத்து உயிர்ப்புற்று அலகுடையதாக இசைக்குங்கால் 'உயிர் மெய்' என்னும் குறியீட்டைப் பெறுகின்றது.

9:2 தனிமெய் தன்னை உணர்த்த அகரச் சாரியையோடு இயங் கினும் அது வேறெழுத்தாகாமைபோல, மெய்யெழுத்து அலகு பெற வேண்டி உயிர்த்துணையால் உயிர்ப்புற்று இசைக்

கின்றதே யன்றி வேறெழுத்தன்று; மெய்யின் பிறிதொரு நிலையேயாம். சாரியை பெற்றிசைக்கும் மெய்யெழுத்திற்கும் இதற்கும் வேறுபாடு தோன்ற 'உயிர்' என்னும் அடைகொடுத்து உயிர்மெய் எனக் கூறப்பட்டதென்க. இஃது இனஞ் சுட்டும் பண்புகொள் பெயர் என்க.

9:3 மேலே [5.0 —1, 2,] கூறியாங்கு மெய்யெழுத்தின் நிலை மூன்றனுள் 'மெய்' என்பது சாரியை பெற்றியங்கும் நிலையையும், 'புள்ளி' என்பது ஒலிப்புடையதாய் இயங்கும் நிலையையும், உயிர்மெய் என்பது அலகு பெற்றிசைக்கும் நிலையையும் உணர்த்தும்.

9:4 தனித்தும் மொழியின் மூவிடத்திலும் வரும் இவ்வுயிர் மெய்யினை ஆசிரியர் [ஈரொலியாலான] ஓரெழுத்தாகவே கூறுவதனை

உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா
—[மொழி-11]

பலரறி சொன்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரம் கெடுதலும்
—[தொகை-30]

ரஃகான் ஒற்றும் 'ப'கர இறுதியும்
—[கிளவி-7]

ஆஅ 'வ'என வரூஉம் இறுதி
—[கிளவி-9]

அதுவென் உருபுகெடக் குகரம் வருமே
—[வேற்றுமை-11]

என்னும் நூற்பாக்களுள்ளும் பிறவற்றுள்ளும் காணலாம்.

இக்கருத்தானே ஆசிரியர் புணர்ச்சிக்கண் நிலைமொழி ஈற்றில் நிற்கும் உயிர்மெய்யை உயிரீறு போலக் கொள்ள வேண்டும் என்பாராய்

உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே
—[புணரி-4]

என விதியாக்கிக் கூறினார். உயிர்மெய்யெழுத்தை ஆசிரியர் இரண்டெழுத்தாகக் கருதியிருப்பின் 'உயிரீற் றியற்றே' எனக் கூறுதல் மிகையாகும்; முரணுமாகும்.

9:4.1 மேலும் நா, நீ, சே, பூ என்பவற்றை ஓரெழுத்தொரு மொழியாகவும், ஆல்—பால், காய்—கனி—அணி என்பவற்றை ஈரெழுத்தொரு மொழியாகவும் கனல், அனல், அகழி, பகழி என்பவற்றை மூவெழுத்தொரு மொழியாகவும் எல்லா ஆசிரியரும் கூறுமாற்றாலும் உணரலாம்.

9:5 இவ்வாறு உயிர்மெய் எழுத்துக்கள் உயிரைத் துணைக் கொண்டு இயங்குமிடத்து அவை வாயுறுப்புக்களால் உருப் பெற்று. இருவகையாக ஒலித்து இசைக்கும். இதனைப்,

புள்ளியிலவா யெல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமொ டுயிர்த்தலும்
ஏனை உயிரொ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே
—[நூன்-17]

என விளக்கியுள்ளார் ஆசிரியர்

9:5.1 'புள்ளி யில்லாத மெய்' என்றது வாயுறுப்புக்களால் உருப்பெற்று, ஒலிப்பின்றி நிற்கும் மெய்களை. உயிர்த்தல்= இசைத்தல். அவரவர் என்பது அவ்வவர் என வருமாறுபோல 'உருவாகி உருவாகி' என்பவை உருவுருவாகி என வந்தது.

9:5.2 மெய்கள் அகர உயிரை மேவி இசைக்குங்கால் தம் இயற்கை உருவம் திரியாமல், பட்டாங்கு ஒலிக்கும். ஏனைய உயிர்களை மேவி இசைக்குங்கால் தம் இயற்கை உருவம் சிறிது சிறிது வேறுபட்டுத் திரிந்திசைக்கும். ஆதலின் உயிர்மெய்களின் உரு இரு தன்மைப் பட்டதென்பார் 'ஆயீரியல' என்றார்.

காரணம், அகரம் திரிபின்றி வாய் அங்காந்த நிலையில் தோன்றுவதாலும், ஏனைய உயிர்கள், அண்பல் அடிநா விளிம் புறல், இதழ் குவிதல் ஆகிய திரிபுகளையுற்றுத் தோன்றுவ தாலும் அவற்றைத் துணையாகக் கொள்ளும் மெய்களும் அத் திரிபுகளுக்குள்ளாகி இருவகையாக இசைக்கின்றன.

10:0 'இனி, ''புள்ளியிலவாய் எல்லா மெய்யும் ...... ஆறே'' [நூன்-17] என்னும் நூற்பாவும். மெய்யின் இயற்கை புள்ளி யொடு நிலையல் [ நூன்-15] என்னும் நூற்பாவும் ஒப்பக்கூறல் என்னும் உத்தியாலமைந்தவையாதலின் ஒலிவடிவில் ஏற்படும் இம்மாற்றங்களை வரிவடிவிலும் அமைத்துக் கொள்ளுதல் முறை யாகும்.

வரிவடிவம் காலந்தொறும் வேறுபடுவன ஆதலின் அவ்வக் காலங்களில் சான்றோர்கள் அமைத்துக் கொள்ளும் வரிவடிவங் களில் ஒலிப்பில்லா மெய்க்கும், ஒலிப்புடைய புள்ளிக்கும், உயிர்ப்புடைய உயிர்மெய்க்கும் வேறுபாடு தோன்ற [ வரிவடிவங் களை ] அமைத்து எழுதுவார்கள். ஆதலின் ஆசிரியர் தம் காலத்திருந்த எந்த ஒரு வரிவடிவையும் சுட்டி வரையறை செய்து கூறவில்லை என்பதை 'மெய்யின் வடிவே புள்ளியாய் அமையும்' என்றாற்போலக் கூறாமல் ''மெய்யின் இயற்கை'' என்றும் ''புள்ளியொடு'' என உடனிகழ்ச்சி உருபு கொடுத்தும் 'அமை யும்' என்னாது ''தோன்றும்'' என்றும் கூறினார். 'இயற்கை' என்பது தன்மையைக் குறிக்குமேயன்றி யாண்டும் வடிவைக் குறித்து வருதலில்லை. மேலும், 'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்'' [புண-2] எனக் கூறியது வேண்டாவாம். இவ் வாறே 'புள்ளியில்லா எல்லா மெய்யும் வடிவாகி' என்னாது 'உருவாகி' என்றும் 'வேறாகி' என்னாது ''திரிந்து'' என்றும் 'அமையும்' என்னாது ' உயிர்க்கும்'' கூறினார். உயிர்த்தல் என்பது வரிவடிவைக் குறித்து வருதல் இயலாது.

எனவே இந்நூற்பாக்கள் ஒலிவடிவ இலக்கணமே கூறுகின்றன என்பதைத் தெளியலாம். எழுத்ததிகாரத்துள் எவ்விடத்தும் எழுத்துக்களின் வரிவடிவத்தைப் பற்றி ஆசிரியர் இலக்கணங் கூறவில்லை என்பதை அறியலாம்.

'சினை'

என்பதன் விளக்கம்:

**11:0 சி**னை என்னும் பல பொருள் ஒரு சொல். ஈண்டுச் சொல்லின்கண் உறுப்பாய் நிற்கும் எழுத்தை உணர்த்தி நிற் கின்றது. [சினை என்பது —கிளை—உறுப்பு —கூறு — என்னும் பொருளது]

**11:1 'சில்'** என்பது இதன் அடிச்சொல்லாகும். அது மை விகுதியோடு புணர்ந்து சின்மை என்றாகிப் பின்னர் வெண்மை, பொன்மை என்னுஞ் சொற்கள்

வெள்—வெண்மை—வெள்ளாறு—வெண்ணாறு

பொல்—பொன்மை—பொலிவு—பொன்

என வழங்குதலைப்போல மை விகுதி நீங்கிய பின்னும் 'சின்' நின்று வினைமுதற் பொருண்மை உணர்த்தும் ஐகார விகுதி யோடு கூடிச் 'சினை' என ஆக்கம் பெற்றுள்ளது இச்சொல்லால்

தனி எழுத்துக்களை ஆசிரியர் யாண்டும் சுட்டிக் கூறவில்லை. மொழிக்கண் நிற்கும் எழுத்தையே சுட்டுகின்றார்.

11:2 தொல்காப்பியர் இச்சொல்லை எழுத்து என்னும் பொருளில் ஆறு இடங்களில் உயிர், உயிர்மெய், சார்பெழுத்து ஆகிய எல்லாவற்றிற்கும் பொதுவாகவே வழங்கியுள்ளார். எனவே இதுவும் காரணம்பற்றிய குறியீடேயாம்.

—:( நிறைவு ):—

---

## வெண்பாப் போட்டி

ஈற்றடி:-

**தமிழவேள் செய்த தகவு**

செய்யுள் வந்து சேரவேண்டிய
இறுதி நாள்: 10—5—1982

முதற்பரிசு பெறுவோர்க்கு ஓராண்டுத் தமிழ்ப் பொழில் இலவயமாக அனுப்பப் பெறும். தகுதியுடைய பாக்கள் தமிழ்ப் பொழிலில் வெளியிடப் பெறும்.

**பதிப்பாசிரியர்.**

---

பொறுப்புணர்த்து, வாழ்க்கையை நடத்தும் திறமையுண்டேல் வாழ்க்கைப் பயனை முற்றும் அடைந்தவராவோம். பொறுப் புணராவழி துன்பியலை விளைக்கும்.

—தமிழ வேள் த. வே. உ

# பாரதியின் நாடகப் படைப்புகள்

முனைவர் ஏ. என். பெருமாள்

[2]*

'காதலைக் காட்டிலும் பெரிய இன்பம் வேறில்லை' என்று கிளியின் வாயுரையாகவும் 'வெயிலைப்போல் அழகான பதார்த்தம் வேறில்லை' என்று பசுவின் கூற்றாகவும், 'பாட்டைக் காட்டிலும் ரசமான தொழில் வேறில்லை' என்று நாகணவாய்ப் புள்ளின் கருத்துரையாகவும் பலவற்றைப் பாரதி சொல்லி மனித னுக்கு அறிவுறுத்த முயல்கிறார். காட்சியின் முடிவாக அனைத் துப் பறவைகளும் ஒன்று கூடி.

'துயரத்தை அழிப்போம், கவலையைப்
[பழிப்போம்
மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம்'[11]

என்று உரத்த குரலில் பாரதியின் கருத்தை உலகுக்கு எடுத்துக் கூறுகின்றன.

மன மாசுடையவர்களே ஒருவரை ஒருவர் பகைத்து அழிக்க முயல் வர் என்பதை நச்சுப் பாம்புகள் இரண்டு ஒன்றை ஒன்று எதிர்த்து இறுதியில் இரண்டும் சாகும் காட்சியாக விளக்கிக் காட்டுகிறார் பாரதி.[12] ஆணும் பெண்ணுமாகப் பாம்புகளைப் படைத்து அவற்றை வெறுப்புடன் மோதவிட்டுச் சாகடிக்கும் பாரதியின் கருத்து மேலும் சிந்தனைக்கு உரியதாகும்.

இறுதிக்காட்சி இன்ப காட்சியாக மலர்கிறது. தேவதத்தன் என்ற இளைஞன் தன்னைக் கவலையின் பிடியிலிருந்து விடுவித்து இயற்கையுடன் ஒன்றிய இன்ப வாழ்வு வாழ்கிறான். உலகத்தை உன்னதமானதாக மதிக்கிறான். இனிதாகவும் நல்லதாகவும் காண்கிறான். இரண்டாம் காட்சியில் விளக்கப் பெற்றதுபோல் அனைத்தும் 'நாராயண மயம்' என்பதை ஐயத்துக்கு இடமின்றி உணர்கிறான்.

'உலகம் நல்லது கடவுள் ஒளிப்பொருள்
அறிவு கடவுள் அதனிலை மோக்ஷம்'[13]

---

*துணர்-55, மலர்-12, பக்கம்-290-இன் தொடர் கட்டுரை.

என்பது தெளிவான மனமுடையாருக்குத் தோன்றும் நல்லறிவாகும். தீமையிலிருந்து விடுதலை பெறும் மனிதன் கடவுள் நிலை பெறுவதாக நாடகம் உணர்த்துவதுடன் நிறைவு பெறுகிறது.

கலியுகத்தில் வாழ்ந்த பாரதி, மனிதன் எல்லாவிதமான துன்பத்திலிருந்தும் விடுதலை பெற்று இன்ப வாழ்வு வாழவேண்டும் என்ற விருப்பத்தில் 'விடுதலை' என்ற நாடகத்தைப் படைத்துள்ளார் என்று விளங்குகிறது. கலி முடிவில் காட்சி தொடங்குவதாக நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து நாடகத்தைப் புனைந்துள்ளார்.

நாடகத் தொடக்கத்தில் பிரமதேவனின் விருப்பத்தை இந்திரன் தேவர்களுக்கு எடுத்துக் கூறுகிறான்.

'மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய
தளையெலாம் சிதறுக'[14]

என்று அவன் சொன்னதும் அனைத்துத் தேவரும் இன்பத்தால் துள்ளிக் குதித்து,

'தந்தை வாழ்க! தனிமுதல் வாழ்க!
உண்மை வாழ்க! உலகம் ஒங்குக!
தீது கெடுக! திறமை வளர்க'[15]

என ஓங்கிய குரலில் உரைக்கிறார்கள். வாழ்த்தில் நாடகத்தைத் தொடங்கி எப்படி மானிட இனம் வாழவேண்டும் என்ற அறிவுரையை இடைநடுவே பாரதி திறமையாகப் புகுத்துவதைக் காணலாம். அறிவுக்கு அதிபதியான ஒளிக் கடவுளின் வாயுரை மனிதனுக்கு வேண்டிய அறிவுரையாக அமைகிறது.

'ஒருவனைக் கொண்டு சிறுமை நீக்கி
நித்திய வாழ்விலே நிலைபெறச் செய்தால்
மானிடச் சாதி முழுநல் வழிப்படும்
மானிடச் சாதி ஒன்று! மனத்திலும்
உயிரிலுந் தொழிலிலும் ஒன்றே யாகும்'[16]

மனிதன் விடுதலை பெற்று இன்பத்தோடு வாழ வேண்டுமானால் இவ்வாறு இருக்க வேண்டும் என்பது பாரதியின் தெளிவான கருத்து. அறிவுடையோர் இதனை உண்மையாக உணர்வர் என்ற கருத்து விளங்க இக்கூற்றை ஒளிக் கடவுளின் வாயுரையாக வெளிப்படுத்துகிறார்.

கலி முடிவில் வாழத் தகுதியான மனிதனை வசுபதி என்ற இளைஞன் உருவில் கற்பனையாகப் படைத்துக் காட்ட பாரதி

விரும்புகிறார். வசுபதிக்குக் காற்று உயிர் வளர்த்ததையும், இந்திரன் மதி வலியையும், சூரியன் அறிவு ஒளியையும் கொடுக்க பாரதி விரும்பிய மனிதன் உருவாகிறான். அவன் அச்சமின்றி தவத் தொழில் செய்து தரணியைக் காக்க வேண்டுமென்று தேவர் விரும்புகின்றனர்.

வசுபதி புதுப்பொலிவுடன் விளங்குகிறான். அறிவுடன் செயல்படுகிறான். இதனை அவன் பாடும் ஒரு பாடலில் விளக்கப் பாரதி முற்படுகிறார். நிலவைப் பார்த்து வசுபதி பாடுவதாகப் பாட்டு அமைந்துள்ளது.

'இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்
வானொளி தன்னை மண்ணிற் காண்பீர்
துன்பந் தானோர் பேதைமை யன்றே!
வாராய் நிலவே வா'[17]

இவ்வுலகம் தேவர் உலகம் போன்று இன்பத்தின் இருப்பாக அமைய வேண்டும் என்பது பாரதியின் தணியாத ஆவல். மனிதன் துன்பப்படுவது அறியாமையேயன்றி வேறில்லை என்பது அவருடைய கருத்து. இதனையே 'சகத் சித்திரம்' என்ற நாடகத்திலும் பாரதி வலியுறுத்திக் காட்டியுள்ளார் என்பது சிந்திப்பதற்கு உரியதாகும்.

'மதியின் வலிமையால் மானுடன் ஓங்குக'[18]

என்று பெரு விருப்பாகப் பாரதி வாழ்த்துவதில் உள்ள கருத்தையும் சிந்திக்க வேண்டும். அறியாமை, அச்சம், மனவருத்தம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்று இயற்கையோடு இணைந்து இன்ப வாழ்வை இயல்பாகப் பெற்றுச் சிறக்க வேண்டும் என்ற வாழ்க்கைத் தத்துவத்தை பாரதியார் தன்னுடைய நாடகங்களான 'சகத் சித்திரம்' 'விடுதலை' ஆகியவற்றைக் கொண்டு விளக்கியுள்ளார். கவிஞருடைய நோக்கம் சிறப்புடையது பயன் மக்களின் புரிந்து செயல்படும் திறனைப் பொறுத்தது. சிறந்த முறையில் கருத்தை விளக்குவதற்காக இவ்விரு நாடகங்களும் பாரதியின் பேனாவிலிருந்து கனிந்தவை என்று கருதலாம். ★ ★ ★

---

**அடிக்குறிப்பு:**

1 (அ) கலைமாமணி சகசுரநாமத்தின் சேவா நாடகக் (ஸ்டேஜ்) குழுவினர் பாஞ்சாலி சபதத்தைக் கவிதை நாடகமாக அமைத்துப் பலமுறை மேடையில் நடித்துள்ளனர்.

(ஆ) கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை மாணாக்கரும் ஆய்வாளரும் 1969-இல் குயில் பாட்டைத் திருவனந்தபுரம் வானொலியின் வாயிலாக நாடக உருவில் ஒலிபரப்ப உதவினர்.

2 பாஞ்சாலி சபதம், இரண்டாம் பாகம், பாடல் 23.

3 'விடுதலை' நாடகத்தில் முதல் அங்கத்திலுள்ள இரண்டு காட்சிகளுமே பாதிக்கப்பட்டுள்ளன. முதலங்கம் என்று குறித்திருப்பதனால் இன்னும் அங்கங்கள் இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

4 புயற் காற்று, பாடல்-3, அடி-2.

5 ஷை பாடல்-2, அடி-1.

6 சகத் சித்திரம், முதற் காட்சி, அடி-3—4.

7 ஷை இரண்டாங் காட்சி, நாரதர் கூற்று

8 ஷை முதற்காட்சி, காக்கையரசன் கூற்று

9 ஷை முதற்காட்சி, பறவைகளின் கூற்று,

10 ஷை மூன்றாங் காட்சி, கிளியின் கூற்று

11 ஷை மூன்றாங் காட்சி பறவைகளின் கூற்று.

12 ஷை நாலாங் காட்சி

13 ஷை ஐந்தாங் காட்சி, தேவதத்தன் உரை

14 விடுதலை, முதற் காட்சி, இந்திரனின் கூற்று

15 ஷை முதற் காட்சி, தேவர்களின் கூற்று

16 ஷை முதற்காட்சி, ஒளிக் கடவுளின் கூற்று

17 ஷை இரண்டாங் காட்சி, வசுபதி பாடல்.

18 ஷை முதற்காட்சி, இந்திரன் கூற்று

---

## தாழ்ந்தால் ....

தமிழுயர்ந்தால் தமிழ்நாடு
தானுயரும் அறிவுயரும்
அறமும் ஓங்கும்
இமயமலை போலுயர்ந்த
ஒருநாடும் தன்மொழியில்
தாழ்ந்தால் வீழும்

—பாவேந்தர் பாரதிதாசன்

# சங்கத் தமிழ் வளர்த்த சான்றோர்கள்

—சிறுவை மோகனசுந்தரம்

சங்கத் தமிழ் வளர்த்த சான்றோர்களாகிய தமிழ்ப்பெரும் புலவர்களின் பிறந்த நாளும் மறைந்த நாளும் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. தமிழறிஞர்களுக்கு விழாக் கொண்டாட விரும்பும் தமிழன்பர்கட்கு இது பெரிதும் பயன்படும் என்று கருதுகின்றேன்.

| | பெயர்: | பிறந்த நாள்: | மறைந்த நாள்: |
|---|---|---|---|
| 01 | பெரும்புலவர் மீனாட்சி சுந்தரனார் | 6— 4—1815 | 1— 2—1876 |
| 02 | ஆறுமுகநாவலர் | 18—12—1822 | 4—12—1889 |
| 03 | வேதநாயகம் பிள்ளை | 11—10—1826 | 21— 7—1886 |
| 04 | எச். ஏ. கிருட்டின பிள்ளை | 23— 4—1827 | 3— 2—1900 |
| 05 | சி. வை. தாமோதரம் பிள்ளை | 12— 9—1832 | 1— 1—1901 |
| 06 | உ. வே. சாமிநாதையர் | 19— 2—1855 | 28— 4—1942 |
| 07 | மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை | 5— 4—1855 | 25— 4—1897 |
| 08 | எம். எஃசு. பூர்ணலிங்கம் பிள்ளை | 24— 5—1866 | 16— 6—1947 |
| 09 | அரசஞ் சண்முகனார் | 15— 9—1868 | 10— 1—1915 |
| 10 | சூரியநாராயண சாத்திரி (பரிதிமாற் கலைஞர்) | 6— 7—1870 | 2—11—1903 |